


PROTONTECH
175, Main Street
Trincomalee
075 6602486



அறைவு 02 இயம் 36 May 03 - 09, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்


## 6ம் ஆண்டு நினைவு



திரு. சிவராம்

யாழ்ப்பாணத்தில் 29.4.2007ல் படுகொலை செய்யப்பட்ட இளம் ஊடகவியலாளர் செ.ரவிவர்மனின் 7ம் ஆண்டு நினைவு

ஒழுக்கத்திற்குப் பொறுப்பான ஆசிரியரால் வறிய மாணவிக்கு

# “செருப்புமாலை தண்டனை”



### ஆசிரியருக்கு இடமாற்றம் காவல்துறை அதிகாரியின் பரோபகாரம்

குடும்ப வறுமை நிலை காரணமாக பாடசாலைக்குச் செருப்புடன் சென்ற மாணவிக்கு ஆசிரியர் தண்டிப்பதாகக் கூறி செருப்பை மாலையாக்கி அணிவித்த சம்பவமொன்று திருகோணமலைப் பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை சேருநுவர பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. 13

# தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அதிருப்தி

திருகோணமலையில் நடைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாநாட்டிற்கு முன்னைய நாட்களில் நடைபெற்ற தலைவருடனான சந்திப்புக்களில் திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தாம் கட்சி நடவடிக்கைகளில் புறக்கணிக்கப்படுவதாக அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மூத்த உறுப்பினர்களே கட்சிக்காக தேர்தல்களில் கடுமையாக உழைத்ததாகவும் 13

# 40 மில்லியனிற்கு வாங்கிய 400 டபிலட் கணனிகள் உடப்பில்

தொழிற் திணைக்கள அலுவலர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட 400 மடிமேற் கணணிகள் களஞ்சியத்தில 13

# கங்குவேலியை மீட்டுத்தாருங்கள்

## - சனாதிபதியிடம் இந்துக் குருமார் வேண்டுகோள் -

**மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் திரு. தண்டாயுதபாணி கோரிக்கை**

அகத்திய முனிவரால் பிரதிஸ்டை செய்யப்பட்ட சிவலிங்கப் பெருமானை மூலமூர்த்தியாகக் கொண்டதும், திருக்கரைசைப் புராணபாடல் புகழ் பெற்றதும், உலகிலேயே அகத்திய ஸ்தாபனமாக இருக்கின்ற ஒரேயொரு ஆலயமாகக் கருதப்படும், உலகெங்கிலும் உள்ள இந்துக்களின் வரலாற்றுப் பொக்கிசங்களில் ஒன்றாகக் கருதப்படும் கங்குவேலி அகத்திய ஸ்தாபனச் சிவன் ஆலயத்தின் புனருத்தாரணப் பணிகளுக்கு அச்சுறுத்தல்களும் தடைகளும் சவால்களும் ஏற்பட்டுக் கட்டுமானப் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. 13

# காணாமற் போனவர்கள் இந்தோனேசியச் சிறையில் ?



அவுஸ்திரேலியப் பயணத்தில் ஈடுபட்டு சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் காணாமற் போனார்கள் எனக் குறிப்பிடப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த பல இளைஞர்களுள் ஒருவர் தற்போது இந்தோனேசியச் சிறையில் உணவுத் தவிர்ப்புப் போரில் 13






- JKAB PARK HOTEL is No.1 city hotel in the north and east and it is your perfect haven. And world class hospitality experience imbuing the true Sri Lankan feel.
- JKAB PARK HOTEL have 28 rooms blend exotic luxuries and esoteric pleasure for perfect holiday or business sojoum.
- Here you experience in exelent environment for dining in the beautifully landscaped three restaurants.
- JKAB PARK HOTEL have three banquet halls for your special day and events and three conference and meeting halls.
- JKAB PARK HOTEL Location is in the centre of all tourist places of Trincomalee, You can easily visit all tourist places with in two days.
- Our room rates are flexible, The rates range from Rs.3500 - Rs.12000 for single, double, trible and family (4 packs, 6 packs and 8 packs) .
Prices of buffet meals are Rs.400 upwards.
Here Srilankan, Indian, Chinese, Western, Italy, Thai and Malaysian foods are available.

JKABpark
The Garden of Pleasures

JKAB PARK
HOTEL (PVT) LTD

No. 93, Love Lane, Nilaveli Road, Trincomalee.
Tel: 026 2227361, 026 4925244
Fax: 026 2227362
Web: www.jkabparkhotel.com
E-mail: jkabparkhotel@yahoo.com












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை

malaimurasu@hotmail.com 075-4252042

# தண்டிப்பவரின் முன்னே நிற்பவன் யார்?

தண்டனைகள் பற்றி ஏற்கனவே ஒரு தடவை எழுதியிருப்பது இன்றும் ஞாபகத்திற்கு வருகின்றது.

தண்டனைகள், நாம் அடைய நினைக்கும் பெறுபேற்றைக் கொண்டுவர வேண்டும் என்பதை தண்டிக்க முற்படும் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் பெரும்பாலான தண்டனைகள் அவை எட்ட நினைக்கும் இலக்கை அடைவதில்லை. மிகச் சிறந்த உதாரணமாக தெருப்போக்குவரத்துச் சட்டங்களை மீறும் சாரதிகளுக்கு வழங்கப்படும் தண்டனைகளினால் அவ்வாறானவர்கள் எவ்வளவிற் குத் திருந்துகின்றார்கள் என்பதை நீங்கள் ஒவ்வொருவரும் கண்கூடாகக் கண்டிருப்பீர்கள்..

மாதாவிற்கும் பிதாவிற்கும் மேல்நிலையில் வைத்துப் பார்க்கப்படும் ஆசிரியர்கள் அசாத்தியமான பொறுமையும் அளவற்ற அன்பும் கொண்டவர்களாகவே மனித குலத்தால் பார்க்கப்டுகின்றார்கள். அவ்வாறான பண்புகளுடன் இருந்த ஒரு ஆசிரியரால்தான் இன்று நாம் இந் நிலையில் இருக்கின்றோம்.

ஆனால் தற்போது சில ஆசிரியர்கள் தொடர்பாக வெளி வந்துகொண்டிருக்கும் தகவல்களால் பெரும் மனக்கிலேசங்கள் உருவாகியிருக்கின்றன.

ஆங்காங்கே ஆசிரியர்களுக்கு எதிராக பாலியல் குற்றங்கள் கடுமையாக முன்வைக்கப்பட்டு வரும் இவ்வேளையில் ஆசிரியர்களின் அதீத தண்டனைகள் தொடர்பாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

அண்மையில் அதிபர் ஒருவரின் நடவடிக்கையால் இளம் மாணவியொருவர் பலியாகினார். அதனைத் தொடர்ந்து திருகோணமலையில் மாணவியொருவர் சப்பாத்து அணிந்து வராததால் செருப்பு மாலை அணிவிக்கப்பட்ட சம்பவம் வெளியானது.

ஒழுங்கு என்பதை எவ்விதத்திலும் மீற முடியாது என்பது மிகவும் முக்கியமானதே. அதுவும் பாடசாலை மாணவர்களிடையே ஒழுங்கை நிலைநிறுத்துவது எதிர்காலச் சமுதாயத்தின் சிறந்த கட்டுமானத்திற்கு அத்திவாரம் என்பதில் ஐயமில்லை.

ஆனால் ஒழுங்கு மீறப்படும்போது அம் மீறல் வேண்டுமென்றே நிகழ்ந்ததா? அல்லது தவிர்க்க முடியாமல் நிகழ்ந்ததா? என்பது ஆராயப் படுவது தண்டனைக்கு முன்னரான படிநிலைகளில் ஒன்று என்பதை நாம் மறந்து விடுகின்றோம்.

வேண்டுமென்றே ஒழுங்குமீறல் இருக்குமாயின் அந் நடத்தை தண்டனைக்குரிய குற்றமே! ஆனால் தவிர்க்க முடியாது நிகழும் ஒழுங்கு மீறலுக்கு பாத்தியவாதியார் என அறிந்த அவருக்கன்றோ தண்டனை வழங்க வேண்டும். அதை விடுத்து செருப்புடன் வந்த மாணவியை காலை தொடக்கம் மதிய உணவு வேளை வரை செருப்பு மாலையுடன் அலைய விட்ட தண்டனையை சரியென்று சொல்ல முடியுமா?

மனித உளவியல் ஆய்வுகளின் முடிவுகள் தண்டனை வழங்கப்படும் செயல்முறையின் ஒரு கட்டத்தில் தண்டனை கொடுக்க முனைபவர் தண்டனை பெறுபவரின் வதையை ரசிக்கத் தொடங்கிவிடும் நிலையொன்று இருப்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது. அந்நிலையில் மனிதன் மிருகமொன்றாகி விடுகின்றான்.

தண்டனை வழங்கும் பொறுப்பைக் கொண்ட அனைவரும் தண்டனைக்கு முன் புரியப்பட்ட குற்றம் வேண்டுமென்றே செய்யப்பட்டதா? அல்லது வேறுவழியின்றி செய்யப்பட்டதா? என்பதை ஆராய வேண்டும். அதே போலவே வழங்கப்படும் தண்டனை எதிர்காலத்தில் அந்த ஒழுக்க மீறலை மீண்டும் நிகழ்த்த விடாதபடி இருக்க வேண்டும்.

இலங்கையில் ஆசிரியர்களுக்கு வெளிப்படையாகவும் ஆயுதப் படையினருக்கு உட்கிடையாகவும் தண்டனை வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தடியை உயர்த்த முன்னரும் துப்பாக்கியின் விசையை அழுத்த முன்னரும் ஒரு கணம் சிந்தியுங்கள்.... உங்கள் முன்னால் மண்டியிட்டு நிற்பவன் மனிதன் என்று.....

சிந்திப்பீர்களா?

# சம்பூர் மாணவிகள் கண்டுபிடிக்கப்பட்டனர்

சம்பூர் - சேனையூர் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் முதல் காணாமல் போன பாடசலை மாணவிகள் மூவர் நேற்று மாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் காணாமல் போயுள்ளதாக நேற்று முன்தினம் சம்பூர் காவல் நிலையத்தில், அவர்களின் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில், நேற்று மட்டக்களப்பு - ஏறாவூர் கிராம அதிகாரியினால் ஏறாவூர் காவல்நிலையத்தில் குறித்த மாணவிகள் மூவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

குறித்த மாணவிகளில் ஒருவரது மாமியின் வீட்டில் அவர்கள் தங்கியுள்ளனர் என்று கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து கிராமசேவையாளரினால் இவ்வாறு காவல்துறையினரிடம் கொண்டு வந்து மாணவிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# உசுப்பேற்றி உணர்வுடன் கதைப்பவரே த.தே.கூவினர்

தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களை உசுப்பேற்றிவிட்டு உணர்வாக கதைப்பவர்கள் மட்டுமே. அவர்களினால் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லையென மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்திகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த பிரதியமைச்சர் முரளிதரன் மேலும் தெரிவிக்கையில் நாங்கள் கடந்த 30வருடகால யுத்தத்தினால் முழுமையாக பாதிக்கப்பட்டவர்கள். எங்களை கட்டியெழுப்ப வேண்டிய தேவை எமக்கிருக்கின்றது. நாங்கள் எதிர்ப்பு அரசியலை செய்து கொண்டு எம்மை கட்டியெழுப்ப முடியாது என்றும் தெரிவித்தார்.

# முதலைப் பல்லிகளுடன் மூவர் கைது



முதலைப் பல்லி என அழைக்கப்படும் அருகிவரும் இனமான 12 இராட்சத பல்லிகளை உடன் வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலைக் காவல் துறைக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் இவர்கள் பல்லிகளுடன் கைதாகியுள்ளனர். மேற்படி ஊர்ந்து செல்லும் சீவராசி அருகி வரும் இனங்களில் ஒன்றாகும்.

எனவே அவற்றை பிடிப்பது, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது போன்றன தடை செய்யப்பட்டுள்ளன.


மருதானை பிரதேசத்தில் உள்ள ஒரு தரகருக்கு விற்பதற்காக இவை எடுத்து வரப்பட்டதாகவும் முதற்கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

# இனி சிவப்புப் பட்டியல் வராது?

இனிவரும் காலங்களில் மின்சாரசபை சிவப்புப் பட்டியலை வழங்கப் போவதில்லை என அறிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தத் தவறும் மின் பாவனையாளர்களை எச்சரிக்கும் முகமாக மின்சார சபையானது சிவப்புப் பட்டியலை அவர்களுக்கு அனுப்பி வைக்கும் நடைமுறையைப் பலகாலங்களாகக் கொண்டிருந்தது.

எனினும் இந் நடைமுறை இனிப் பின்பற்றப் படப்போவதில்லை எனத் தெரிகின்றது. 30 நாட்களுக்கு மேல் கட்டணத்தைச் செலுத்தாத பாவனையாளரின் மின் இணைப்பு முன்அறிவிப்பின்றித் துண்டிக்கப்படும் எனத் தெரிகின்றது.



# "கைதுகளைப் பற்றி எனக்குத் தெரியாது"

## த நேசன் செய்திச் சேவைக்கு சம்பந்தர் தெரிவிப்பு

''பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்களின் கைது தொடர்பாகவோ அல்லது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாகவோ எனக்குத் தெரியாது. ஆனால் அறிக்கைகள் அவ்வாறே தெரிவிக்கின்றன" என திரு.சம்பந்தர் அவர்கள் த நேசன் செய்திகளுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் " தமிழ் மக்களை அரசாங்கம் அச்சத்தில் ஆழ்த்தும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது" எனத் தெரிவித்துள்ளார். ஜெனீவாத் தீர்மானத்தின் பின்னர் இலங்கை அரசு மிகைப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. உண்மையில் விடுதலைப் புலிகளின் மீள் இணைவு என்பது அரசினால் உருவாக்கப்பட்ட நாடகம் என்ற பார்வையே தமிழ் மக்களிடமும் மற்றும் பலரிடமும் இருக்கின்றது.

ஆனால் இச் செயற்பாட்டின் ஊடாக ஜெனீவாத் தீர்மானத்தின் படி நடைபெறவிருக்கின்ற விசாரணைகளின் போது மிகமுக்கிய தகவல்களை வழங்கக் கூடிய தமிழ் மக்களை அச்சப்படுத்தி அமைதியாக்கும் நடவடிக்கையினையே அரசு முன்னெடுத்துள்ளது.

உண்மையில் தமிழர்கள் அனைவரும் வன்முறையொன்றை மீண்டும் உருவாக்குவதை மிகக் கடுமையாக எதிர்க்கின்றார்கள் என்பதை நான் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கன்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிழக்கிலும் மீள்குடியேற்றம் தொடர்பாக ஆய்வு

மீள்குடியேற்றத்துறை அமைச்சினால் வடக்கு கிழக்கு பகுதிகளில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, நீண்டகாலமாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாச தெரிவித்தார்.

சுமார் ஆயிரத்து 400 குடும்பங்கள் வடக்கு கிழக்கில் நீண்டகாலமாக இடம்பெயர்ந்துள்ளதாக அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதுவரை 2 லட்சத்து 25 ஆயிரம் குடும்பங்களைச் சார்ந்த 7 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் அதிகமான இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுதவிர, மேலும் எண்ணாயிரத்து 400 குடும்பங்கள் எதிர்வரும் காலங்களில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாகவும் மீள்குடியேற்றத்துறை அமைச்சின் செயலாளர் ஜனக சுகததாச குறிப்பிட்டார்.

# மதுபோதைச் சாரதிக்கு கடூழியச் சிறை

அட்டாளைச்சேனை பாலமுனையைச் சேர்ந்த ஒருவர் மது போதையில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றபோது அக்கரைப்பற்று காவல்துறையினரால் கைது செய்யப்படார்.

கைது செய்யப்பட்டவர் கடந்த திங்கட்கிழமை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதிவான் ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா குற்றம் இருந்ததை கருத்திற் கொண்டு தண்டனையாக ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு மாத கடூழிய சிறைத்தண்டனையும் பத்தொன்பதாயிரத்து ஐந்நூறு ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

# பேயோட்டியின் தாக்குதலில் பெண் பலி

வெல்லாவெளியினை சேர்ந்த பெண்ணொருவர் கடந்த மூன்று மாதமாக நெஞ்சு வலி மற்றும் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.இந்த நிலையில் அவர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த நிலையிலும் வீட்டுக்கு வரும்போது அந்த நோய் மீண்டும் ஏற்பட்டதனால் சோதிடரை நாடியுள்ளார்.

அவரின் ஆலோசனையுடன் பூசாரி அழைத்து வரப்பட்டு பூசைகள் செய்யப்பட்டுள்ளன. இதன்போது குறித்த பெண்ணின் தலையில் வேப்பிலைக் கட்டினால் அடித்து பூசைகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் பெண் தலையில் கடுமையாக தாக்கப்பட்டதன் காரணமாக உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (மட்டு நியூஸ்.கொம்)

அநீதிகளை, தவறுகளை,
மோசடிகளை,
பொறுக்கமுடியவில்லையா?.....

நீங்கள் நேரடியாகக் கேட்க
முடியாததை
மலைமுரசின் ஊடாகக்
கேளுங்கள்.....!

இரகசியம் காக்கப்படும்
075 4252042

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் : சொந்தக் குடிமனைகளில் குடியேற முடியாமல் 9 ஆண்டுகள்





திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் பிரதேச மக்கள் தமது பிரதேசத்திலிருந்து வெளியேறிய 9வது ஆண்டை இன்று சனிக்கிழமை நினைவுகூர்ந்த அதேவேளை சொந்த மண்ணில் மீள்குடியேற்றம் வேண்டி சிறப்பு பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

சம்பூர் பத்திரகாளியம்மன் ஆலயத்தில் இந்த சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெற்றன.போர்க் காலத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த சம்பூர் பிரதேசத்தில் 2005ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாகவே அந்த பகுதியிலுள்ள குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

கடந்த 2005-ம் ஆண்டில் இராணுவ தளபதியாகவிருந்த சரத் பொன்சேகா மீது கொழும்பில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலை அடுத்து சம்பூர் பிரதேசத்தில் விமானத் தாக்குதல்களும் தொடர்ந்து இராணுவ நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டன.

சம்பூரில் மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் தற்போது உயர் பாதுகாப்பு வலயம், பொருளாதார முதலீட்டு வலயம் மற்றும் இந்திய அனல் மின் நிலையம் என்று அரசாங்கத்தினால் அடையாளமிடப்பட்டுள்ளதால் போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், அந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளது.

9 ஆண்டுகளுக்கு முன்னர் தமது வாழ்விடங்களையும் பிரதேசத்தையும் விட்டு வெளியேறிய சுமார் 900 குடும்பங்கள் கிளிவெட்டி, கட்டைப்பறிச்சான், பட்டித்திடல் உட்பட மூதூர் பிரதேசத்திலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் போதிய அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் தொடர்ந்தும் தங்கியுள்ளன.

தமது சொந்த மண்ணிலிருந்து இடம்பெயர்ந்த 9 வது ஆண்டை பிபிசி தமிழோசையிடம் நினைவுகூர்ந்த மக்கள், மீள்குடியேற்ற விவகாரத்தில் அரசாங்கத்தினாலும் வெளிநாடுகளினாலும் பல்வேறு அமைப்புகளினாலும் தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளதாக தமது கவலையை வெளிப்படுத்தினார்கள்.

**நன்றி- பி.பி.சி**

# சிறுநீரகக் கொள்ளை - கடத்தல் - மரணம்



ஆசியாவில் கடத்தலுக்கோர் கேந்திர நிலையமாக இலங்கை உருவாகியுள்ளது. மனிதர், போதைப்பொருள், தங்கம், பழைமைப் பொருட்கள் என விரியும் கடத்தல் சாம்ராச்சியத்தில் இலங்கை முக்கிய வகிபாகத்தை கொண்டுள்ளது. சட்ட மற்றும் நீதித் துறையில் அரசியல் தலையீடும், சட்ட அமுலாக்க அமைப்புக்களின் சுதந்திரமல்லாத் தன்மையும் இலங்கையை கடத்தலுக்கான கேந்திர நிலையமாக கடத்தல் புள்ளிகள் கருத இடமளித்துள்ளது. இதன் ஒரு கட்டமாக சிறுநீரக கடத்தல் தகவல் கடந்த வாரம் வெளிச்சத்துக்கு வந்தது.

கடந்த மாதம் 28ம் திகதி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட திலீப்குமார் மாரோ (தினேஸ்) என்ற 26 வயது இந்திய இளைஞனின் மரணம் சிறுநீரகக் கடத்தலை உலகிற்கு கொண்டு வந்தது.

மார்ச் மாதம் 23ம் திகதி இலங்கைக்கு வருகை தந்த தினேஸ், கிரன்குமார் மற்றும் அரம் சர்கர் மூவரும் கொழும்பு நவலோக தனியார் வைத்தியசாலையொன்றில் தமது சிறுநீரகங்களை விற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மார்ச் 28ம் திகதி தினேஸ், அரம் சர்கர் உடன் நன்றாக மதுவருந்திவிட்டு கடலில் நீராடியுள்ளனர். தனியார் வைத்தியசாலைக்கு திரும்பிய போது திடீரென தினேஸ் வாந்தியெடுத்துள்ளார். அதனையடுத்து அவருக்கு ஏற்பட்ட சடுதியான மாரடைப்பால் அவர் மரணமாகியுள்ளார். வாந்தியெடுத்தவுடன் அவரைத் தேசிய வைத்தியசாலைக்கு அரம்சர்கர் கொண்டு சேர்த்தாராயினும் சேர்க்கும் போதே அவர் மரணமடைந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து அவரது உடலமும் அரம்சர்கரும் ஊருக்குத் திரும்பினர்.

இவர்கள் இருவருக்கும் அப்போதுவரை சிறுநீரக அறுவைச் சிகிச்சை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதனால் அவர்களிருவரும் ஏன் இலங்கைக்கு வந்தனர் என்பது வெளியாகவில்லை. ஆனால் மரணித்த தினேசின் தம்பிக்கு தனது அண்ணன் ஏன் இலங்கைக்குச் சென்றான் என்பது சந்தேகமாகவே இருந்தது. ஏனெனில் விசாகப்பட்டிணத்திற்குச் செல்வதாக கூறிச் சென்ற தினேஸ் ஆறு நாட்களின் பின் எப்படி கொழும்பிலிருந்து தொடர்பு எடுத்தான் என்பதே அவன் சந்தேகமாக இருந்தது.

தினேசின் கணனியை உயிர்ப்பித்த அவனது தம்பி தினேஸ் இறுதியாகப் பார்த்த வலைத்தளங்களின் வரலாற்றைப் பார்த்து ஒவ்வொரு வலைத்தளமாகத் தேடிய போது சிறு நீரகங்களை விற்கும் இரகசிய வலைத்தளங்களாகவே அவை இருப்பது தெரியவந்துள்ளது. அதைத் தொடர்ந்து தினேசின் இலத்திரனியல் அஞ்சல் பெட்டியைத் திறந்த போதுதான் தினேசின் சிறுநீரகமொன்றின் விலை 15 லட்சம் ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது தெரிந்தது. விடயம் காவல்துறைக்குப் போகவே செய்தி உலகத்திற்கு தெரியவந்துள்ளது.

சிறுநீரகக் கடத்தலின் முக்கிய சூத்திரதாரிகள் மூவர் கைதாகினர். அவர்களின் தகவலின்படி தமக்கு ஒரு சிறுநீரகத்திற்கு 50,000.00 தொடக்கம் 150,000.00 வரை தரகு கிடைக்கும் எனவும் வழங்குபவருக்கு 500,000.00 கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளனர். ஆனால் இதற்காக இலங்கையிலுள்ள சம்பந்தப்பட்ட வைத்தியர் மோனிக் அறவிடுவது 40 தொடக்கம் 50 லட்சங்களாகும்.

இலங்கையில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையை "வெஸ்டேன், நவலோக, ஹேமாஸ் மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ்" ஆகியனவே மேற்கொள்கின்றன. இந்தியாவில் இரத்த உறவல்லாத ஒருவருக்கு உடலுறுப்புக்களைத் தானமாக வழங்குவது சட்டவிரோதமாக இருப்பதால் இலங்கைக்கு இந் நடவடிக்கைகள் இடமாற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட முகவர்களால் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள கொடையாளிகள் எண்ணிக்கை 26.

**வியாபாரம் எப்படி நடைபெறுகின்றது?**

வலைப்பின்னல் ஊடாக கொடையாளியை முகவர்கள் தேடிக் கண்டுகொள்வர். அவரது தகவல்களுடன் சில அடிப்படைப் பரீட்சிப்பு அறிக்கைகளும் கொழும்பிலுள்ள வைத்தியர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அக் குறித்த வைத்தியர் தன்னிடமுள்ள நோயாளிகளின் பட்டியலை ஒப்பிட்டு பொருந்தி வந்தால் கொழும்பில் அறுவை சிகிச்சை நிகழும்.

"ஐந்து லட்சம் தருவதாக வாக்குறுதியளித்து கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்ட அரம்சர்கருக்கு இங்கு வைத்து தருவதாக ஒபபுக்கொண்ட தொகை வெறும் 3.9 லட்சங்களே..... அவ்வாறாயின் தினேசிற்கு...?

தகவல் மூலங்கள்
Sunday Observer, Ceylon today, Times of India

# கேஎவ்சி உணவில் புழு

நீர்கொழும்பில் உள்ள கே.எவ்.சி உணவகத்தில் வழங்கப்பட்ட பிறைட் ரைஸ் மற்றும் சிக்கனில் புழு இருந்தமை கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.




கடந்த மாதம் நீர்கொழும்புப் பெண் ஒருவர் அப்பிரதேசத்திலுள்ள கே.எவ்.சி உணவகத்திலேயே இவ் அசூசையான சம்பவத்தை எதிர் கொண்டுள்ளார். அதை யடுத்து உடனடியாகவே அவருக்கு புதிய உணவுகள் வழங்கப் பட்டுள்ளன. எனினும் அவர் தனது கைப்பேசியில் அப் புழுவைப் பதிவு செய்துள்ளார்.



இலங்கையில் கே.எவ்சி உணவுகளை வழங்கும் ஜோன்கீல்ஸ் குழுமம் இதனை ஒரு திட்டமிட்ட சதியெனத் தெரிவித்துள்ளது. அத்துடன் வாடிக்கையாளருக்கு சிறந்த சேவையை வழங்கும் தமது உறுதிப்பாடு தொடரும் எனத் தெரிவித்துள்ளது.

# ஜேம்ஸ் பாகர் இலங்கையை விட்டு வெளியேறலாம்

இலங்கையில் தற்போதுள்ள நிலைமைகளைக் கருத்திற்கொண்டுள்ள ஜேம்ஸ் பார்க்கர் தனது முதலீடுகளை ஜப்பானுக்கு மாற்றலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

உலக சூதாட்ட மன்னர்களில் ஒருவரான அவுஸ்திரேலிய நாட்டு கோடீஸ்வரன் ஜேம்ஸ் பார்க்கர் தனது சூதாட்ட மையமொன்றை இலங்கையில் அமைப்பது தொடர்பான முயற்சிகளில் இறங்கியிருந்தார்.

அரசும் அதற்குப் பச்சைக் கொடி காட்டியிருந்தது. எனினும் பொருளாதார மூலோபாயச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்பட்ட போதே சூதாட்டத்திற்கு எதிராகப் பலர் திரண்டது தெரியவந்தது. அதையடுத்து அச்சட்ட மூலத்திலிருந்து சூதாட்டம் என்னும் பதம் நீக்கப்பட்டது.

அதையடுத்தே ஜேம்ஸ் பார்குகரின் இலங்கைக் கனவு நனவாகா நிலை தோன்றியுள்ளது.

# கொழும்பில் கழிவகற்றலுக்கும் வரி



கொழும்பு நகரில் கழிவகற்றல் முறைமையினைப் பெரும் பொருட் செலவில் கொழும்பு மாநகரசபை முன்னெடுத்து முடித்துள்ளது.

இதற்கான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து மாநகரசபை கடனாகப் பெற்றே இப் பணியை முன்னெடுத்தது. அதனையடுத்து இத்திட்டத்தின் மூலம் பொருளாதார நன்மைகளை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கழிவகற்றல் வரியை அறவிட மாநகரசபை கலந்தாலோசித்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்காலம் முடிவிற்கு வருமா?

கே. சஞ்சயன்

இலங்கையில் அண்மைக்காலமாக நிகழும் சம்பவங்களை அவதானிக்கும்போது, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொற்காலம் முடிவுக்கு வருகிறதா என சந்தேகம் தோன்றுகிறது.

இந்த அரசாங்கம் கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு முன்னதாக எவ்வாறு பலம் பெற்று எழுச்சி கொண்டதோ, இப்போது அதே வேகத்தில் கீழ் நோக்கிச் சரியத் தொடங்கியுள்ளது.

இது வெறுமனே அண்மையில் நடந்துமுடிந்த மாகாணசபைத் தேர்தல் முடிவுகளை மட்டும் கருத்தில் கொண்ட கணிப்பல்ல.

இந்த அரசாங்கத்துக்குப் பலம் சேர்த்து நின்ற ஒவ்வொரு தூண்களும் இப்போது ஆட்டம் காணத் தொடங்கியுள்ளன. அதனால் தான், இந்த அரசாங்கத்தின் பொற்காலம் முடிவுக்கு வரப் போகிறதா என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு முன்னின்று உழைத்த கட்சிகள், இப்போது அதைக் கைவிடத் தயாராகிவிட்டதாகவே தெரிகிறது.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட போர்நிறுத்த உடன்பாட்டைக் கிழித்தெறிவதற்காகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற புதிய கூட்டணியை அமைக்க மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி.) ஜாதிக ஹெல உறுமயவும் முன்வந்தன.

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவினாலும் அப்போதைய அமைதி முயற்சிகளுக்கு எதிரான அவற்றின் பிரசாரங்களாலும்தான், 2001இல் இழந்த ஆட்சியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியால் மீளப் பெறமுடிந்தது.

அதுபோலவே, 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்'வை வேட்பாளராக்கி அவரை வெற்றி பெற வைப்பதிலும் இந்தக் கட்சிகளின் பங்கு கணிசமானது என்பதை மறந்துவிடலாகாது.

ஆயினும், வடக்கில் தேர்தலைப் புறக்கணிக்க வைத்து மஹிந்த ராஜபக்' ஆட்சிபீடம் ஏற தெளிவான வகையில் உதவியவர்கள் விடுதலைப் புலிகளே என்பதில் சந்தேகமில்லை.

எவ்வாறாயினும், வடக்கில் தேர்தல் புறக்கணிப்பு இடம்பெற்றிருந்தாலும், ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவு இல்லாமல் மஹிந்த ராஜபக்'வினால் ஒருபோதும் வெற்றி பெற்றிருக்க முடியாது.

பின்னர், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் மற்றும் அதில் பெற்றுக்கொண்ட வெற்றியைப் பயன்படுத்தி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்'வின் அரசாங்கம் அதிகாரத்தை வலுப்படுத்திக்கொண்டது.

அசைக்க முடியாதொரு அரசாங்கமாக அது கடந்த பத்தாண்டுகளையும் கழித்துவிட்டது. இதனை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொற்காலம் என்றால் மிகையில்லை.

போர்நிறுத்த உடன்பாடு முறிந்து, நோர்வேயின் சமாதான முயற்சிகள் கைவிடப்பட்ட சூழ்நிலையில், அரசாங்கத்துக்கான ஆதரவை விலக்கிக்கொண்டது ஜே.வி.பி. ஆனாலும், அரசாங்கத்தை அசைக்க முடியாத நிலையே இருந்து வந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்'வுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் இணைந்து நிறுத்தியபோதிலும், வெற்றி பெற முடியவில்லை.

போரில் ஈட்டிய வெற்றி, இதுவரையான எல்லாத் தேர்தல்களிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்'வையும் அவரது அரசாங்கத்தையும் காப்பாற்றியே வந்துள்ளது.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த நாட்டின் மற்றெல்லாப் பகுதிகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொற்காலத்துக்கு இதுவரை பெரும் பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை. ஆனால், இப்போது நிலைமைகள் மாற்றமடையத் தொடங்கியுள்ளன.

ஒரு பக்கத்தில் அரசாங்கத்தின் செல்வாக்கு குறையத் தொடங்கியுள்ளது. இன்னொரு பக்கத்தில் எதிர்க்கட்சிகள் பலமடையத் தொடங்கியுள்ளன.
மற்றொரு பக்கத்தில், அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்து வந்த கூட்டணிக் கட்சிகளும் மெல்லக் கழன்று செல்வதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன.

இவையெல்லாவற்றுக்கும் அப்பால், அரசாங்கத்துக்கு சர்வதேச அழுத்தங்களும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

தென் மற்றும் மேல் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றியைப் பெற்றுள்ளபோதிலும், கணிசமான இழப்பைச் சந்தித்துள்ளது.

ஆசன ரீதியாகவும் வாக்குகள் ரீதியாகவும் விகிதாசார ரீதியாகவும் அரசாங்கத்தின் செல்வாக்கு வீழ்ச்சி கண்டுள்ளதை இந்தத் தேர்தல்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

இரண்டு மாகாணங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சுமார் இரண்டரை இலட்சம் வாக்குகளை இழந்துள்ளது.

இந்த முடிவை வைத்து நோக்கும்போது ஒன்பது மாகாணங்களிலும் ஆகக் குறைந்தது ஏழு இலட்சம் வாக்குகளையாவது ஆளும் கட்சி இழக்கும் என்று கணிக்கப்படுகிறது.

இத்தகைய நிலையில், எதிர்க்கட்சிகள் மத்தியில் பொதுவான ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் இணக்க முயற்சிகளும் நடப்பதாகத் தெரிகிறது.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக கூடத் தகவல்கள் வெளியாகின்றன. அதாவது, எதிர்க்கட்சிகள் பலம் பெற்று வருவது அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஒரு அபசகுனம்தான்.

அதைவிட, ஜே.வி.பி.யும் சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சியும் கூட வளர்ச்சி காணத் தொடங்கியுள்ளதை அண்மைய மாகாணசபைத் தேர்தல்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

சிறுபான்மை மக்களின் ஆதரவை இந்த அரசாங்கம் வேகமாக இழந்துவரும் நிலையில், சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியிலும் அதன் செல்வாக்கு ஆட்டம் காணத் தொடங்கியிருப்பது மோசமான நிலையே.

இப்போதைய நிலையில் தேசிய அளவிலான தேர்தல் ஒன்று வருமானால், பல கட்சிகள் ஆளும் கூட்டணியை விட்டு விலகும் என்பதில் சந்தேகமில்லை.

குறிப்பாக, பிரதானமாக சிறுபான்மைக் கட்சிகள் இவ்வாறு தனித்துப் போட்டியிட முனையலாம். அதைவிட ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி போன்ற சிங்களத் தேசியவாதக் கட்சிகளும் அரசாங்கத்தில் இருந்து வெளியேறத் தருணம் பார்த்துள்ளதாகவே தெரிகிறது.

அண்மையில் கசினோ தொடர்பான கட்டளைச் சட்டம் மீதான வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்கு எதிராக அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அத்துரலிய ரத்தின தேரரும் வாக்களித்தமை முக்கியமான விடயம்.

விமல் வீரவன்சவும் கூட அரசாங்கத்திலிருந்து வெளியேறத் தயாராவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு பந்தயத்தில் குதிரை ஒன்று சற்று பலவீனப்பட்டாலும், அதன் மீது எவரும் பணம் கட்டமாட்டார்கள்.

அதுபோலத் தான் மஹிந்த ராஜபக்' அரசாங்கம் ஆட்டம் காண்பதாக சற்று உணரத் தொடங்கினாலும், கூட்டணிக் கட்சிகள் கழன்று போகத் தொடங்கிவிடும்.

பொதுவாக எல்லா நாடுகளினதும் கூட்டணி அரசாங்கங்களில் இதுவே அரசியல் தர்மமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தனியே கூட்டணிக் கட்சிகளின் ஆதரவை இழப்பது மட்டும் இப்போதுள்ள ஆபத்தாகத் தெரியவில்லை.
அதற்கும் அப்பால், சந்திரிகா குமாரதுங்க போன்ற ஒரு வலுவான அரசியல் தலைமை உருவாகும் அறிகுறி தென்பட்டாலேயே, ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் பலர் அந்தப் பக்கம் தாவக்கூடும்.

கடந்த காலங்களில் ஐ.தே.க.வின் பக்கத்திலிருந்து பலர் சந்திரிகாவின் பக்கம் தாவியதும் பின்னர் ஐ.தே.க. ஆட்சிக்கு வரும் அறிகுறி தென்பட்டபோது, ரணில் விக்கிரமசிங்கவின் அரசுடன் இணைந்துகொண்டதும் மஹிந்த ராஜபக்' அரசாங்கம் வலுப்பெற்றபோது அவர்கள் ஓடி வந்து இணைந்துகொண்டதும் தான் வரலாறு. அதுபோன்று மீண்டும் நடக்காதென்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

தற்போதைய அரசாங்கத்துக்குள் இருக்கும் அனைத்து அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆட்சித் தலைமையின் மீது முழு விசுவாசம் கொண்டிருப்பதாகவோ, நம்பிக்கை வைத்திருப்பதாகவோ கருதமுடியாது.

பலருக்கும் பலவிதமான பிரச்சினைகள், மனக்கசப்புகள், மாற்றுக் கருத்துகள் எல்லாம் உள்ளன. அதிலும், சந்திரிகா குமாரதுங்க போன்ற ஒரு மாற்றுத் தலைமை போட்டிக்கு நிறுத்தப்பட்டால், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் அவரது பக்கம் போய்விடக் கூடிய சாத்தியங்கள் அதிகமாகவே உள்ளன.

ஏற்கெனவே அமைச்சர்களான திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர போன்றோர் சந்திரிகா குமாரதுங்கவுடன் பேச்சுக்களை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் கூடச் செய்திகள் வெளியாகியுள்ளன.

வலுவான மாற்று அணி ஒன்று உருவாக்கப்படுவதானது எதிர்க்கட்சிகளை இரண்டு விதத்தில் பலம் பெறச் செய்யும். முதலாவது எதிரணியின் பலத்தை அதிகரிக்கச் செய்யும். இரண்டாவது ஆளும் கூட்டணியைப் பலம் இழக்கச் செய்யும். அத்தகையதொரு நிலையானது இயல்பாகவே ஆட்சிமாற்றத்தை உருவாக்கும் வலிமையைக் கொடுக்கும்.

கசினோ விவகாரத்தில் அரசாங்கம், சிங்கள பௌத்த அடிப்படைவாதிகளினது ஆதரவை மட்டுமன்றி, சிறுபான்மைக் கட்சிகளினதும் நம்பிக்கையையும் இழந்துள்ளது.

அதேவேளை, மத விவகாரங்களில் தலை தூக்கியுள்ள பிரச்சினைகளைக் கையாளும் விடயத்திலும் சிறுபான்மையின மக்களின் நம்பிக்கையை அரசாங்கத்தினால் தக்க வைத்துக்கொள்ள முடியவில்லை.

போர் மற்றும் அதனைத் தொடர்ந்து போரின் வெற்றியைக் கொண்டு அரசாங்கம் உருவாக்கிய கோட்டையில் இப்போது ஓட்டை விழத் தொடங்கியுள்ளது.

போர் வெற்றி எல்லாக் காலங்களிலும் கைகொடுக்காது என்பதால் தான், அரசாங்கம் சீனா போன்ற நாடுகளின் காலைப் பிடித்து, பெறப்பட்ட நிதியைக் கொண்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டது.

அந்த அபிவிருத்திப் பணிகளும் கூட, அரசாங்கத்துக்கு போதியளவில் கைகொடுக்கும் போலத் தெரியவில்லை.

ஏனென்றால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்'வின் சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டையில் இந்தப் பத்தாண்டுகளில் செய்யப்படாத அபிவிருத்தி வேலைகள் ஏதுமில்லை.



வரண்டுபோய் கிடந்த பூமியை விமான நிலையம், துறைமுகம், மைதானங்கள், தொழிற்கூடங்கள் என்று வளம்மிக்க இடமாக மாற்றியது இந்த அரசாங்கம்.

ஆனால், கடந்த மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சி அம்பாந்தோட்டையில் 18 ஆயிரம் வாக்குகளை இழந்திருக்கிறது.

இது அபிவிருத்தி, பொருளாதார திட்ட மாயைகளுக்குள் மக்கள் அகப்பட விரும்பவில்லை என்பதையே சுட்டிக்காட்டியுள்ளது.
இங்கு மட்டுமல்ல, தென் மாகாணத்திலும் மேல் மாகாணத்திலும் கூட, அபிவிருத்தித் திட்டங்கள் அரசாங்கத்துக்கு கைகொடுக்கும் வகையில் அமைந்திருக்கவில்லை.

எனவே, மக்களின் எதிர்பார்ப்பு வேறேதோவொன்றை அடிப்படையாக கொண்டுள்ளது என்பதை உணர முடிகிறது. இது அரசாங்கத்துக்குப் புரியாமல் இருக்காது.

இந்தச் சூழலில், அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தங்களை அரசாங்கம் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயன்றது. மாகாணசபைத் தேர்தலில் அதுவும் அவ்வளவாக கைகொடுக்கவில்லை. குறிப்பாக ஜெனீவா தீர்மானத்தை வைத்து வாக்குகளை கவர அரசாங்கம் போட்ட திட்டமும் தோல்வி கண்டுள்ளது.

இந்த நிலையில், இந்த அரசாங்கம் தனது செல்வாக்கை அதிரிகத்துக்கொள்வதற்கு புதிய உத்தியொன்றை நாட வேண்டிய தேவை எழுந்துள்ளது.
ஆனால், எப்போதுமே மக்கள் எந்தவொரு கட்சியும் தொடர்ச்சியாக ஆட்சியில் இருப்பதை விரும்புவதில்லை.

அது அரசியல் தலைவர்களினது தான் தோன்றித்தனத்துக்கு காரணமாகி விடும் என்று மக்கள் எப்போதுமே கருதி வந்துள்ளனர்.

பத்தாண்டுகளாக பழகிப்போன இந்த அரசாங்கத்தின் முகங்களைப் பார்த்துப் பார்த்து அவர்களுக்குச் சலிப்பு வரத் தொடங்கிவிட்டது.

எனவே, அவர்கள் புதிய முகம் ஒன்றைத் தெரிவுசெய்ய முனைவது தான் இயல்பு. இத்தகைய நிலையில், அரசாங்கம் உடனடியாகக் கவிழப் போகிறது என்றோ ஆட்சிமாற்றம் நடக்கப் போகிறது என்றோ கூற வரவில்லை.

இந்த அரசாங்கத்தின் பொற்காலம் மங்கத் தொடங்கி விட்டது என்பதே சரியானது.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய மறுத்தால், ஒருவேளை மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே ஆட்சிக்கு வரலாம்.

ஆனால், கடந்த முறையைப் போன்று வாக்குகளை அரசாங்கத்தினால் பெறவோ பலமான ஆட்சியை அமைக்கவோ முடியாது.

ஏனென்றால், மங்கிப் போகும் அந்தப் பொற்காலம் இனி மீளவும் வருவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

நன்றி - தமிழ்மிரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதில நோ பூ சுத்திங்

...நாட்டு நடப்பு...


1983ம் ஆண்டிற்கு முன்னும் அதற்கு பின்னும் அந்த மூவின மக்களைக் கொண்ட மாவட்டம் அடிக்கடி



பாதிக்கப்பட்டுவருவதால் அது வன்செயல் மாவட்டம் என பொதுமக்களால் அழைக்கப்பட்டு வந்தது. பாதிக்கப்பட்ட அனேக அரச ஊழியர்களுக்கு 'ரேப்பியா' எனும் நிறுவனத்தினால் ஓர் அரச வங்கி ஊடாக ரூபா 200,000 க்குட்பட்ட குறைந்த வட்டியைக் கொண்ட புனர்வாழ்வுக் கடன்கள் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட பல அரச ஊழியர்களால் அக்கடன் தொகைகள் பெறப்பட்டாலும் பொருளாதாரக் கஷ்டத்தின் மத்தியில் பெற்ற கடனை பலரால் செலுத்த முடியாமல் போன சம்பவங்கள் பல. சுமார் மூன்று தடவைகள் இடம்பெற்ற அந்த கொடூர வன்செயல் காரணமாக அன்று அவர் தனது சகல உடமைகளையும் இழந்ததின் நிமித்தம் ரூபா 150,000 ஐ அரச வங்கி ஊடாக புனர்வாழ்வுக் கடனாகப் பெற்றார்.

அந்த அரச வங்கியானது அரச ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தை மட்டும் நம்பி அக்கடன்களை வழங்கவில்லை. ஊழியர்கள் தத்தம் பூர்வீக ஆதனங்களை வங்கிக்கு அடகு வைத்தே அக்கடன்களைப் பெற்றிருந்தார்கள். கல்வி அமைச்சில் கடமை புரிந்த அந்த ஊழியரும் பெற்றோரால் தனக்கு



வழங்கப்பட்ட சுமார் 11 பேர்ச் காணியை அடகு வைத்தே ரூபா 150,000 ஐ புனர்வாழ்வுக் கடனாகப் பெற்று அன்று வன்செயலினால் சேதமாக்கப்பட்ட தனது வீட்டை புனரமைப்பு செய்து கொண்டார்.

அவர் தொடர்ந்து மாதாந்த தவணைப் பணத்தை வங்கிக்கு செலுத்திக் கொண்டுவந்த வேளையில் பல சிக்கல்கள் அவரின் குடும்பத்தில் உருவாகின. 1988ம் ஆண்டில் கடும் நோய்வாய்ப்பட்டு அவரின் தாயார் இறந்தார். 1990ம் ஆண்டு கலவரத்தின் போது அவரின் மாமனார் இடம்பெயர்ந்து சென்று மன்னாரில் காலமானார். 1993ம் ஆண்டு அந்த ஊழியர் முற்றாக பணிநீக்கம் செய்யப்பட்டார். அவ்விதம் அடுத்தடுத்து வந்த துன்பத்தொடர்களால் வங்கி தவணைப் பணத்தை செலுத்துவதில் சீர் செய்ய முடியாத பல தடைகள் தோன்றி முற்றாக அது ஸ்தம்பிதம் அடைந்தது.

ஆனால் வங்கி தனது நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொண்டு வந்ததுமல்லாமல் சட்ட நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அறிவித்தலும் கொடுத்திருந்தது. மேலும் அவர் தனது கஷ்ட நிலையை தெளிவுபடுத்தி பல பொறுப்புவாய்ந்த அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் அனைவருக்கும் மேன்முறையீடு செய்தும் எதுவும் பயனளிக்கவில்லை.

2004ம் ஆண்டு குறித்த ஆதனத்தை ஏலத்தில் விற்பனை செய்ய வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்கான திகதியையும் குறித்திருந்தது. அரசியலில் மிகவும் பிரபல்யமான தமிழ் கட்சியொன்றின் பிரமுகர் ஒருவர் அன்றைய நிதி அமைச்சருக்கு அவ் விடயத்தை விளக்கி இருந்தார். மேலும் அவ்விதமான புனர்வாழ்வுக் கடன்களை சலுகை அடிப்படையில் சிறு தொகை மூலம் வசூலிக்கும் படியும், குறித்த ஏல விற்பனையை இடைநிறுத்தும் படியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நிதி அமைச்சர் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அவரின் உத்தரவுப்படி அன்றைய ஏல விற்பனை நிறுத்தப்பட்டது. அவ்வளவு தூர நடவடிக்கைக்கு காரணம் அன்றைய ஆட்சியிலிருந்த கட்சியின் முக்கிய ஆதரவாளர்களுள் அன்று வங்கியில் கடன்பட்டிருந்த அந்த அரச ஊழியரும் ஒருவர். ஏல விற்பனை நிறுத்தப்பட்டதால் கடும் சீற்றத்துக்குள்ளாகிய குறித்த வங்கியின் பிராந்திய முகாமையாளர் தனது நடவடிக்கையை கைவிடவில்லை. தொடர்ந்தும் தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருந்தார்.

நிதி அமைச்சரின் அறிவுரைப் பிரகாரம் புனர்வாழ்வுக் கடனுக்கான சலுகை அடிப்படையில் கடன் அறவிடும் திட்டத்தைக் கூட அந்த வங்கி அறிமுகம் செய்து வைக்கவில்லை. ஒரு தடவை அந்த அரச ஊழியர் குறித்த கடன் தவணைப் பணத்தை வங்கிக்குச் செலுத்தச் சென்ற வேளையில், அப்பணம் வட்டிக்காக மாத்திரமே வரவு வைக்கப்படுமென்றும் அசலை மொத்தமாக செலுத்த வேண்டுமென்றும் கூறப்பட்டது.

அந்த அடிப்படையில் வட்டி மாத்திரம் கழிக்கப்படுமானால் அவர் இறந்தாலும் கூட அவரின் கடன் பிரச்சினை தீராது. எனவே தவணைப்பணத்தை செலுத்துவதற்கு எவ்வித மார்க்கமும் இன்றி அவர் வீடு திரும்பினார். அதனால் வட்டியும், அசலும் அவரால் பெறப்பட்ட கடன் தொகைக்கு மேல் அதிகரித்தது. அப்பிரச்சினைக்கு எந்தவித தீர்வும் இல்லாது அவர் அங்கலாய்த்துக் கொண்டிருந்த வேளையில் நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 2005ம் ஆண்டு அந்த அரச ஊழியரின் குறித்த ஆதனம் மிக குறைந்த விலைக்கு ஏலத்தில் விற்கப்பட்டது.

இரண்டாம் முறை மேற்கொள்ளப்பட்ட ஏல விற்பனையை இடைநிறுத்த இடைக்கால தடை உத்தரவை மாவட்ட நீதிமன்றத்தில் பெற்றும் அது கூட பயனளிக்கவில்லை. முன்னாள் நீதி அமைச்சரின் கட்டளையை ஏற்று சலுகை அடிப்படையில் உரியவருக்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருந்தால் அவர் தனது பூர்வீக ஆதனத்தை இழந்திருக்க வாய்ப்பு இருந்திருக்காது. ஆட்சி மாற்றம் வங்கியின் பழிவாங்களுக்கு சாதகமாக அமைந்திருந்தது.

கோடிக்கணக்கில் கடன் பெற்ற அரசியல்வாதிகளினதும், அரசுக்கு வேண்டிய வர்த்தகரினதும், வங்கி அதிகாரிகளினதும், அவர்களின் உற்றார் உறவினர் களினதும் பாரிய அளவிலான கடன் தொகைகளை மீளப் பெற முடியாக்கடனாக கணித்து விசேட சலுகை வழங்கி செயல்பட்ட, செயல்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நாட்டின் சகல வங்கிகளின் பாரபட்சமான நடைமுறைகளை நாம் அறியாமலா என்ன? கோடிக்கணக்கான கடன் நிலுவைகள் இரத்துச் செய்யப்பட்டதை முழு நாடே அறியும்.

அந்த ஊழியரால் குறித்த கடனுக்காக அடகு வைத்த ஆதனத்தின் பெறுமதி ரூபா 38 இலட்சம். காணியை ஏலத்தில் விற்பனை செய்த தொகை ரூபா 10 இலட்சம். அசலும் வட்டியுமாக வங்கி ஏப்பமிட்ட தொகை ரூபா 7 இலட்சம். ஏலத்திலிருந்து பெறப்பட்ட தொகையின் மிகுதி ரூபா 3 இலட்சத்தை வங்கி சுமார் 3 மாதங்களாக உரியவருக்கு மீளச் செலுத் தாமலே இருந்தது. அவர் விண்ணப்பித்ததையடுத்து அப்பணத்திற்கு வட்டி



இல்லாமலே மீளச் செலுத்தியிருந்தது. நிதி ஓம்புட்ஸ்மன் நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்த பின்னரே அதற்குரிய வட்டி செலுத்தப்பட்டது. எப்படி இருக்கிறது வங்கியின் பகற் கொள்ளை? முகமூடி அணியாமல் மேற்கொள்ளப்பட்ட கொள்ளை அது.

ஏலத்தை நிறுத்தக் கோரி பெறப்பட்ட நீதிமன்ற தடை உத்தரவின் பின் உரிய முறையில் வழக்கை முன்கொண்டு சென்றிருந்தால் வங்கி அந்த கடன் பணத்தை அறவாக்குவதற்கு பல சட்ட சிக்கல்கள் தடையாக இருந்திருக்கும். ஆனால் முடியாமல் போய்விட்டது.

ஆனால் அந்த அரச ஊழியரின் கஷ்ட காலம் அவரின் சட்டத்தரணி திடீரென நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாட்டில் குடியமர்ந்துவிட்டார். தொடர்ந்து வழக்காட தகுந்த சட்டத்தரணிகள் இல்லாததினால் வழக்கின் தீர்ப்பு வங்கிக்கு சாதகமாக அமைந்தது.

ஒருவருக்கு குறித்த கடனை செலுத்தமுடியாது போனால் காலம் கடந்த கடனை, அதாவது பெற்ற கடன் தெகை போன்று இன்னுமொரு பங்கை சேர்த்தே அறவிடலாமே தவிர அதற்கு மேல் ஒரு சதமேனும் அறவிடமுடியாதென கூறப்பட்டாலும் அந்த அரச ஊழியரின் விடயத்தில் குறித்த வங்கி மிக அநீதியாகவே நடந்துள்ளது. புனர்வாழ்வு கடனுக்குரிய வட்டியை கூட வர்த்தக கடன் வட்டியாக மாற்றி அறவிட்டது.

தனக்கு சரியான நீதி கிடைக்காத பட்சத்தில் பாராளுமன்ற பொதுமக்கள் முறைப்பாட்டு குழுவுக்கு அந்த ஊழியர் முறைப்பாடு செய்ததையடுத்து அங்கு விசாரணை நடந்தது. உப்புச்சப்பற்ற விசாரணையின் போது 'வங்கியின் சட்ட விதிகளுக்கு ஏற்ப வங்கி நடந்துகொண்டுள்ளது' என அக்குழு பொறுப்பற்ற விதத்தில் தீர்ப்பு வழங்கியிருந்தது.

ஆனால் கோடிக்கணக்கில் பல கடன் தொகைகள் அறவிடமுடியாக் கடனாக கணிக்கப்பட்ட விடயம் தொடர்பில் குழு எந்தவித பதிலும் அளிக்காது ஊழியரின் காதில் பூவை சுற்றி அங்கிருந்து அனுப்பிவிட்டது. ஆனால் அந்த ஊழியர் துணிந்து ஒரு விடயத்தை அங்கு எடுத்து கூறி இருந்தார். 'இலங்கையில் எந்தவொரு வங்கியும் இதுவரை அறவிடமுடியாக் கடனாக எவருக்கும் சலுகை காட்டவில்லை என்பதனை நிரூபித்தால் நான் எனது மனுவை வாபஸ் பெற ஆயத்தமாகவுள்ளேன்' என்று.

அந்த பாராளுமன்றக் குழுவால் எதுவும் கூறமுடியாமல் மௌனித்தாலும் குழுவின் மனசாட்சி மௌனிக்கவில்லை. 'வினாடிக்கு வினாடி அது உறுத்திக் கொண்டே இருந்தது. சில வேளைகளில் தீர்ப்பு வழங்க வேண்டிய நீதி தேவதை கூட தனது இருகண்களை இறுக்கி மூடிக்கொள்கிறாள். கறுப்பு நிறப் பட்டியால் அவளது இரு கண்களும் கட்டி இருந்தும் இந்த நாட்டில் சறுக்கிய தீர்ப்புக்கள் பல. உண்மையான நீதி கூட சில சமயம் அநீதியுடன் சேர்ந்து கூட்டாட்சி நடாத்துவது நாம் அறியாமலா என்ன?

'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது'

முற்றும்...

– பாலையூற்றான் –


## அதிசய தாய்



இங்கிலாந்து நாட்டை சேர்ந்த Rachel Merchant என்ற பெண்மணிக்கு சிறுவயதிலேயே இறுதி மாதவிடாய் என்று சொல்லக்கூடிய மெனோபாஸ் நிலைக்கு ஆளானார். அவர் தன் 17வது வயதிலேயே இந்த நிலைக்கு தள்ளப்பட்டர் என்பது குறிப்பிடத்தக்கது. மேனோபாஸ் ஆனபிறகு சுமார் 20 வருடங்கள் கழித்து மருத்துவத்துறையே அதிசயிக்கும் வகையில் தற்போது குழந்தை பெற்றுள்ளார். மேலும் தாங்கள் அடுத்த குழந்தைக்கு முயற்சி செய்து தங்களது குடும்பத்தை விரிவாக்க இருப்பதாகவும் கூறியுள்ளனர்.

## மரண தண்டனை கைதியால் பரபரப்பு

அமெரிக்காவின் Clayton Lockett என்ற மரண தண்டனை கைதிக்கு தண்டனை நிறைவேற்ற சிறை அதிகாரிகள் முன்பு விஷ ஊசி 6.23 மணிக்கு செலுத்தப்பட்டது. ஆனால் 14 நிமிடங்கள் கழித்து அவர் எழுந்து உட்கார்ந்து, சம்திங் ராங் என்று கூறி தனக்கு ஏதோ செய்கிறது என்று கூறியுள்ளார்.



விஷ ஊசி செலுத்தியும் அவர் உயிருடன் இருந்ததால் அதிகாரிகள் மரண தண்டனையை அடுத்து எப்படி நிறைவேற்றலாம் என்று ஆலோசனை செய்து கொண்டிருந்த நிலையில் அவருக்கு திடீர் மாரடைப்பு ஏற்பட்டு 7.06 மணிக்கு மரணம் அடைந்துள்ளார்.

## சுய இன்பம் அனுபவித்தவர் - கைது

அமெரிக்காவை சேர்ந்த Cory Evan என்ற டிரக் டிரைவர் தேசிய நெடுஞ்சாலையில் டிரக் ஓட்டிக்கொண்டிருந்தார். எதிரே வந்த வாகனங்களில் உள்ளவர்கள் டிரக் டிரைவரின் செய்கையை பார்த்து அதிர்ந்தனர். Cory Evan, டிரக்கை நிர்வாணமாகவும், அதே நேரத்தில் அவர் சுயஇன்பத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப் பதைப்பார்த்து Florida Highway Patrol அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர்.

போலீஸார் அந்த டிரக்கை விரட்டி சென்று பிடித்து டிரைவரை கைது செய்தனர். அவரை கைது செய்தபோது அவர் நிர்வாணமாகவே இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயலோடு உறவாடி

சிறு கதை . . .

...ர்த்துப் பார்த்து எடுத்தது எல்லாம் ஸ்லைட் ஷோவில் ஒவ்வொன்றாக விரிந்தன.

"நுணுக்கமாய் கவனிச்சு எடுத்திருக்கீங்க. ம்ம். நல்லாத்தானிருக்கு. ஆனா வளச்சு வளச்சு இப்படி சட்டிப் பானை, அடுப்பு கரும்புன்னு எடுத்திருக்கீங்களே.. பட்டிக்காட்டான் யானையைப் பாத்த மாதிரின்னு யாரும் நினைச்சுடக் கூடாதேன்னு இருந்துச்சு" வில்லங்கமாகச் சிரித்தாள் சுமதி.

சுந்தரேசன் உற்சாகமாக விவரிக்க ஆரம்பித்தான்..

"நாமதான் எதையும் செய்யறதில்லை. உனக்கும் எல்லாம் புது அனுபவம். மொத தடவையா நீ பொங்கலுக்கு ஊருக்கு வந்திருக்கேன்னு சித்தியும் விளக்கேத்துறதில இருந்து எல்லாத்தையும் உன்னையே பண்ண வச்சாங்க. செஞ்சதை நீயும், பார்த்ததை நம்ம பொண்ணுங்களும் நினைவில் வச்சுக்கணுமேன்னுதான் எடுத்தேன் தெரிஞ்சுக்கோ. இங்க பாரு நம்ம இளவரசிங்கள.."

மகள்கள் இருவரும் பாவாடை சட்டையில் தேவதைகளாய்த் தெரிந்தார்கள். பால் பொங்கி வருகையில் பொங்கலோ பொங்கல் என எல்லோருமாய் கூவியதை வீடியோ க்ளிப்பிங்காக எடுத்திருந்தான். பானையில் அச்சுவெல்லக் கட்டிகளைச் சேர்த்த சுமதியின் வளை கரங்களை மட்டுமின்றி, அடுப்புப் புகையில் இவள் ஓலை வைக்கத் திண்டாடுவதைக் கூட க்ளோஸ் அப்பில் எடுத்து விட்டிருந்தான்.

"ஓ நோ.. இதை உடனே டெலிட் செய்யுங்க" கடுப்பாகிக் கூவினாள். 'அட இருந்துட்டுப் போகட்டும் விடு. நான் ரசிப்பேன்ல. வேணுமானா ஆல்பத்திலே ஏத்தல" என்று சிரித்தவன், சரி, உன் வேலையைக் கவனியேன். இதை முடிச்சுட்டு வந்து சாப்பிட்டுக்கறேன்.

எத்தனை வருடங்களுக்குப் பிறகு வாய்த்தது இது. பெருநகரமும் கிராமமும் இல்லாத ஊர் அவனுடையது. அவனது பள்ளிப் பருவம் வரை அங்கேதான் வளர்ந்தான். அப்பாவுடன் பிறந்த தம்பி விவசாயத்தைப் பார்த்துக் கொள்ள அவர் மட்டும் படித்து வங்கியில் வேலைக்குச் சேர்ந்து விட்டிருந்தார். ஊர் ஊராக மாற்றலாகும் உத்தியோகம் படிப்பு கெட்டு விடக் கூடாது என ஒரே மகனென்றாலும் இவனைத் தன் பெற்றோரிடமே விட்டு விட்டார்.

சித்தப்பாவின் பிள்ளைகளோடு, கிராமத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட இரண்டு அத்தைகளும் டவுன் பள்ளிக்கூடத்திலதான் படிப்பு நல்லாயிருக்கும் என



ஏற்கனவே தங்கள் பிள்ளைகளைக் கொண்டு விட்டிருந்தார்கள். அந்தப் பெரிய மழலைப் பட்டாளத்தில் இவனும் ஐக்கியமாகி, கூடி வாழ்ந்த சொந்தங்களுடன் எந்தக் குறையுமில்லாமல்தான் வளர்ந்தான்.

தோட்டத்தில் பம்பு செட்டுக் குளியல், பண்ணையில் துள்ளும் கன்றுகளோடு ஆட்டம், வயலில் வைக்கோற் போரையே சறுக்கு மரமாக்கி வழுக்கி ஆடியது எல்லாம் எப்போது நினைத்தாலும் மனது குளிர்ந்து போகும்.

அறுவடையாகி வந்த நெல் அடுக்கப்பட்ட நெல்மூட்டைகள் மேலே ஏறி அமர்ந்து கொண்டு அரட்டை அடிப்பார்கள். வீட்டுப் பாடம் செய்வார்கள். பெரிய பெரிய அடுப்புகளில் மெகா சைஸ் உருளிகளில் நெல் அவிக்கும் அழகை வேடிக்கைப் பார்ப்பார்கள். மரத்துடுப்பைத் தாமும் பிடித்து கிண்டிக் கொடுப்பார்கள் ரொம்பச் சமர்த்தாய்.

தொடர்ந்து வந்த பொங்கலின் போது, பண்ணை ஆட்களுக்குக் கொடுக்கின்ற பொங்கல்படி புதுத்துணி எல்லாம் தானமோ தர்மமோ அல்ல, நாம் அவர்களுக்குச் செய்யும் மரியாதை எனப் புதிய கோணத்தில் பார்க்க வைத்தார்கள்.

அதுமட்டுமில்லாமல், நாட்கதிர் என்றொரு வழிபாடு இருந்தது. அறுவடையானதும் பசுமை மாறாத நெற்கதிர் கட்டு ஒன்று வயலில் இருந்து வீடு தேடி வரும் அருள் பாலிக்க. முற்றத்தில் கோலமிட்ட மணை ஒன்றில் அதை நேராக நிறுத்தி பொட்டு பூவெல்லாம் வைத்து சூடம் காட்டிக் கும்பிடுவார்கள்.

பின்னர் தாத்தா அனைவர் கையிலும் ஒரு கதிர் எடுத்துக் கொடுப்பார். நெற்குதிர் அறையில் சுண்ணாம்புக் கோலமிட்டு அலங்கரிக்கப்பட்ட புது மண் பானை காத்திருக்கும். முதல் கதிரைத் தாத்தா வைக்க, மற்ற பெரியவர்கள் தொடர, கூகூஊஊ என ரயில் வண்டி மாதிரி ஒருவர் சட்டையை ஒருவர் பிடித்து வந்த குழந்தைகளும் விளையாட்டு போலவேதான் அதில் கதிர்களைச் சேர்ப்பார்கள்.

கேட்டு கேட்டு வளர்ந்து ப்ளஸ் டூ வரை வந்து விட்டிருந்தவன் அரும்பு மீசையைத் தடவியபடி ஒருமுறை திருப்பிக் கேட்டு விட்டான்.

"அப்பா ஏன் தாத்தா அப்பாவை மட்டும் வேற வேலைக்கு அனுப்பிட்ட..."

கேள்வியின் கூர்மையில் தாத்தா சற்று திணறிப் போன மாதிரி இருந்தது. ஆனால் என்றைக்காவது இப்படிக் கேட்பான் எனப் பதிலைத் தயாராகவே வைத்திருந்த மாதிரியும் இருந்தது.

"நாந்தான் படிக்க முடியாது போச்சு. படிப்பு நல்லா வந்ததாலே புள்ளைங்கள்ல ஒருத்தராவது உத்தியோகம் பாக்க பட்டணம் போகட்டும்னு அனுப்பிச்சேன். காடுகரைய பாத்துக்க சித்தப்பா போதும்னுதான்."

"அப்பாவுக்குப் பதிலா நான் விவசாயத்தைப் பண்ணட்டுமா தாத்தா... படிச்சு முடிச்சுட்டே செய்யறேன்."

"வேண்டாம்பா வேண்டாம்" என்றார் பதட்டமாக. அவனை அருகில் அமர வைத்துக் கையைப் பிடித்துக் கொண்டார்.

"ஏன் தம்பிதான் இருக்கானே. ஒஞ்சித்தப்பா அவனை விவசாயத்துக்கே படிக்க வைக்கப் போறானாம். அவன் பார்த்துப்பான் இந்த நிலம் நீச்சையெல்லாம். உன்னைய என்ஜினீயரா க்கணும்னு கனவு கண்டிட்டிருக்கான் உங்கப்பா. நீயும் படிப்புல அவனப் போலவே புலியா இருக்கே. அவன் பேச்சைக் கேட்டு நட. பெரிய உத்தியோகத்துக்குப் போ."

நெருடலாக இருந்தது அவர் அப்படிப் பேசியது.

அடுத்த வருடம் கல்லூரியில் சேர ஊரைப் பிரிந்தவன்தான். பாட்டி இருந்தவரை அப்பா வேலைக்கு லீவு போட்டு வருடாவருடம் எல்லா பண்டிகைகளுக்கும் அழைத்துச் சென்றார். பாட்டி போனதும் தாத்தாவுக்காக பொங்கலுக்கு மட்டுமாவது போவது கட்டாயமாக இருந்தது. அவர் மறைவுக்குப் பின் அதுவும் நின்று போனது.

இவனும் படித்து முடித்து கணினித் துறையில் வேலையாகி, பட்டணத்துப் பெண்ணே மனைவியாய் வர அசுர வேக இயந்திர வாழ்வில் தொலைத்த பலவற்றில் ஒன்றாகிப் போனது பண்டிகைகளைக் கொண்டாடும் முறைகளும்.

அப்பா தன் பாகத்துக்கு வந்த வயல்வெளி அத்தனையையும் கிரயம் செய்து சென்னையில் இந்த வீட்டை வாங்கிப் போட்டுக் காலமாகியும் விட்டிருந்தார் திடீர் மாரடைப்பில். ஊரில் மிச்சமாகி இருந்தது ஐம்பது செண்ட் அளவிலான தோட்டம் மட்டுமே.

இரண்டு பெண்களைக் கட்டிக் கொடுத்து விட்ட சித்தப்பாவுக்கும் வயதாகி விட விவசாயத்தில் முன் போல ஈடுபட இயலவில்லை. அதை நம்பி மட்டும் பிழைக்க முடியாதென மகன் குமரேசன் நான்கு கார்களை வாங்கி வாடகைக்கு விட்டான். நன்றாக அவை ஓடவே டிரான்ஸ்போர்ட் பிஸினஸில் கவனம் செல்ல ஆரம்பித்து விட்டது. இப்படியாக வயல்கள் எல்லாம் கிரயமாகி கார்களாக வேன்களாக மாற ஆரம்பித்தன. சித்தப்பாவால் தடுக்க முடியவில்லை. ஆனாலும் தன் ஆத்ம திருப்திக்காக என்று சொல்லி சில தோட்டங்களை வசப்படுத்திக் கொண்டு அத்தோடு இவனுடையதையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

தனக்கும் வயதாகிக் கொண்டே வருவதால் குடும்பத்தோடு பொங்கலுக்கு வந்து போப்பா என்ற அவரது அன்புக்குக் கட்டுப்பட்டுத்தான் இந்தமுறை அங்கு சென்றிருந்தான். அப்போதுதான் அவனுக்கான தோட்டத்தைக் காட்டினார். அதில் வாழை பயிரிட்டிருந்தார். சுற்றிலும் சுமார் பத்து தென்னைகளும் இருந்தன. நல்லா வச்சிருக்கீங்க சித்தப்பா என அவர் கையைப் பிடித்து தழுதழுத்து விட்டான்.

மாதாமாதம் அவர் அனுப்புகிற பணத்தை வாங்கிக் கொள்ளுகையில் ஏற்படாத குற்ற உணர்வு பச்சை பசேல் என அவனுடைய தோட்டத்தைப் பராமரித்திருந்த அழகைப் பார்த்ததும் ஏற்பட்டது. வருடக் கணக்கில் எட்டிப் பார்க்காதது எத்தனை பெரிய தப்பென வருத்தியது.

சித்தப்பா அதை பெரிது பண்ணிக் கொள்ளவில்லை.

"எனக்கென்ன சிரமம் சொல்லப் போனா சந்தோசம்தான். உன் தம்பியானா எல்லா வயலையும் வித்து வண்டியாக்கிட்டான். மனசு வலிச்சாலும் அவன் வாழ்க்கைக்கு எது வேணுமின்னு அவந்தானே தீர்மானிக்கணுமின்னு விட்டுட்டேன். எப்படியோ நல்லாயிருந்தா சரிதான். கிராமத்தில நாம நெல்லு விளைச்சல் பாத்த பூமியெல்லாம் வீடு கட்டிடப் போயாச்சு. என் ஆயுசு மட்டும் மிச்சமிருக்கிற தோட்டங்களையாவது விக்கப்படாதுன்னு சொல்லி பயிர் பண்ணிட்டிருக்கேன்"



என்றபடியே அடுத்து இருந்த அவரது தோட்டத்துக்கும் அழைத்துச் சென்றார்.

"ஊரோடு இருக்கேன் உழவைப் பாக்கேன்னு அக்ரிகல்சர் படிச்ச உன் தம்பியும் இப்போ வேற பொழப்பைத் தேடிக்கிட்டான்" என்றார் விரக்தியாக.

என்ன சொல்வதெனத் தெரியவில்லை அவனுக்கு.

ஊரிலே பரிச்சயமான பல இடங்களில் முன்பிருந்த பச்சை வயலெல்லாம் வணிக வளாகங்களாகவும் பெரிய மருத்துவமனைகளாகவும் பள்ளிக் கூடங்களாகவும் அல்லவா மாறி விட்டிருந்தன. பட்டணத்தில்தான் அநியாயம் என நினைத்தால் பெருகி விட்ட போக்குவரத்துக்கென, சாலைகளை விஸ்தரிக்கப் போட்டுத் தள்ளியிருந்தார்கள் பல நூறு வயதான விருட்சங்களை சகட்டுமேனிக்கு. ஏரி குளங்களைத் தூர் வாருவதில் அக்கறை காட்டுவதாகச் சொல்லும் அரசும் தேவையென்று வருகையில் நீர்வளத்தில் கைவைக்கத் தயங்கவில்லை.

ரியல் எஸ்டேட்காரர்கள் சாக்லேட் வார்த்தைகளையும் மீறி ஒரு சிலரே நிலங்களை விளைச்சலுக்குப் பயன்படுத்தி வந்தனர்.

உழந்தும் உழவே தலை என்றிருக்கும் சித்தப்பாவின் வைராக்கியத்தில் பத்து சதவிகிதமாவது வேண்டும் தனக்கு என்கிற ஆசை வந்திருந்தது இப்போது. நேரடியாகத்தான் இறங்க முடியவில்லை. போகட்டும்.

ஆனால் யார் என்ன ஆசை காட்டினாலும் குத்தகைக்கு விட்டாவது ஆயுளுக்கும் தனது தோட்டத்தை விளைநிலமாகவே தக்க வைத்துக் கொள்வது ஒன்றுதான் ஆளாக்கிய தாத்தாவுக்கும், பூமித் தாய்க்கும் செய்யக் கூடிய மரியாதையாக இருக்கும் என உறுதி எடுத்துக் கொண்ட போது மனது கொஞ்சம் இலேசான மாதிரி இருந்தது.

தொலைக்காட்சிப் பெட்டியின் பக்கமே போகாமல், பொங்கலைக் கொண்டாடிக் களித்து மறுநாள் விடைபெறுகையில், வளர்த்த பாசம் கண்ணில் வழிய விடை கொடுக்கத் திணறித்தான் போனார்கள் சித்தியும் சித்தப்பாவும். அம்மாவின் முன் அதிகம் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள இயலாதவனாய் "அடிக்கடி வந்து போறேன் சித்தப்பா. தோட்டத்தையும் பார்த்தாப்ல ஆச்சு" என்றான்.

"அம்மா சாப்பிடக் கூப்பிடுறாங்கப்பா."

நினைவுகளிலிருந்து மீண்டு, தேர்ந்தெடுத்த படங்களை ஆல்பத்தில் ஏற்றி முடிக்கையில், கழுத்தைக் கட்டிக் கொண்டிருந்தாள் மகள்.

இதோ ஆச்சுடா ஒரே நிமிடம் குமரேசன் அட் ஜிமெயில் டாட் காம் எனக் கூடவே நிறுத்தி வாசித்தவள், இவன் அனுப்பி விட்டுக் கணினியை மூடியதும், அப்பா சம்மர் லீவு வரப் போகுது. சின்ன தாத்தா வீட்டுக்குப் போலாம்னு நான் சொன்னா பாட்டியும் அம்மாவும் இப்பதானே போயிட்டு வந்தோம். அடுத்த வருஷம் யோசிக்கலாம் அப்படிங்கிறாங்கப்பா என்றாள்.

"யோசிப்பாங்களாமா மம் நான் அழைச்சுட்டுப் போறேண்டா செல்லம். உன் ஆசையெல்லாம் அவங்களுக்குப் புரியாது."

ஆதங்கமாய்ச் சொன்னவனைப் பார்த்து ஜன்னலுக்கு வெளியிலிருந்து ஆதுரமாய்த் தலையசைத்தன எங்களுக்குப் புரியும் என்பது போல், பத்துக்குப் பதினைந்தடி அளவில் அமைத்திருந்த சின்ன தோட்டத்தில் அவன் நட்டு வைத்து, இப்போது நெடுநெடுவென வளர்ந்து விட்டிருந்த நெல்லி மரமும், காய்த்துக் குலுங்கி நின்றிருந்த தென்னை மரமும்.

நன்றி - தமிழ் கூடல்

முற்றும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு



## 'குருதியில்'

வம்புத்தனம் செய்வோர் எம்மை
வசைபாடி இகழ்ந்தாலும் நாம்
நம்பும்படி நடந்தே நாட்டில்
நம்மினம் வாழ வழிசமைப்போம் - இல்லை
செத்துமடிவோம் ஒன்றாய்
கற்ற கல்வி பாழ்பட நாம் நடக்காது
விற்ற பொருள் மீண்டும் வாங்குதல்
விவேகமுள்ளோர் செயலாகாது
எள்ளி நகையாடும் இழி குணத்தார் முரளி
எரிச்சல் தரும் பேச்சை பேசினாலும்
உள்ளத் தெளிவார் கூறும் வார்த்தை
உலுக்கிவிட்டது அவர் உணர்வை
தமிழினத்தின் ஒற்றுமை புரியாமல்
உரைக்கும் வார்த்தை போதும் போதும்
எதைக் கண்டும் அஞ்சாதீர்
இன்றுள்ள கொடுமையை மீறி - இனிப்
பெரும் கொடுமை எதுவும்
வரப்போவதில்லை!
குருதி வெள்ளத்தில் எங்களை
மிதக்க விட்டாலும் எங்கள்
கொள்கைகளைக் குலைக்க முடியாது!

சி.எஸ்.துரைராஜா
திருகோணமலை

## வாழ்ந்ததே!

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு - கிண்ணியா)

படித்துப் பாருங்கள் - அடடா, படித்துப் பாருங்கள்!
பைந்தமிழில் ஒரு பாவாணர் நூலேனும்... (படித்)
வடித்துத்தந்துளார் - அழகாய், வடித்துத் தந்துளார்!
வந்து கலந்திட்ட கூளமெல்லாம் நீக்கி... (வடித்)

கழகக் காலத்தில்- ஆமடா, கழகக் காலத்தில்,
கற்கண்டு போல் தமிழ் சொற்கொண்டு வாழ்ந்ததே(க)
பழக நேர்ந்ததால் - பலரொடும், பழக நேர்ந்ததால்,
பாழாகியே தேய்ந்து பாதியாய் நிற்குதே... (பழக)

பரிதிமாற்கலைஞர் - சாஸ்திரி, பரிதிமாற்கலைஞர்,
பழம்மறைமலை வேதாசலச்சாமி... (பரிதி)
அரியபாவாணர் - நேயராம், அரியபாவாணர்,
அன்புக்குழந்தை - பாவேந்தரின் நற்றமிழ்... (அரிய)

சாமி படிக்கவில்லை - தமிழைச் சாமி படிக்கவில்லை,
சாற்றும்மொழி பெயர்ப்பாளரும் இல்லையே? (சாமி)
நாமிங்கிருப்பதிலே - கெடுவாய், நாமிங்கிருப்பதிலே,
நம்மொழிக்கேதேனும் நன்மையுண்டாகுமோ? (நாமி)

## வரந்தர பத்திரகாளியே வாருமம்மா

தாய்த்திரு நாடும் நம்
தாய்மொழி தமிழும்
தேயாது வளர காளிதேவி
திருவருள் புரிவாய்!

நோய் துயர் நீங்க தமிழர்
நோக்கம் நிறைவேற
தாயே ஸ்ரீ பத்திரகாளி
தயவாக வரந் தருளுமம்மா!

உழைப்பவர் ஓங்க இங்கு
ஊழல்கள் ஒழிய
மழை மாதம் மாதம் பொழிய
மகா காளித்தாயே வரந்தாருமம்மா!

கோணேசர் பூமியில்
கொடுமைகள் கொடியவர் அகல
ஞானம் செல்வம் வீரந்தரும்
ஸ்ரீ பத்திர காளியே வாருமம்மா!



# கோணேசர் கல்வெட்டு

பாகம் : 04

திருகோணமலையில் நீதி பரிபாலனை செய்யும் உரிமை வன்னிபத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.. குளக்கோட்டன் மனுநீதி கண்ட சோழனின் மரபில் வந்தவன். நீதி முறைகளை நன்கு அறிந்தவன். நீதி வழங்குபவன். இதனால் வன்னிமைகள் எவவாறு நீதி வழங்க வேண்டுமென்று கோணேசர் கல்வெட்டில் குறிப்பிட்டிருக்கின்றான்.



வன்னிமையிடம்,

சுத்தமிகு வன்னிமையே குற்றஞ் செய்தால் துவங்கு

விலக்கடி உயிருக்குயிரே வாங்கு'நிர்த்தமிடு மடவியர்கள் குற்றஞ் செய்தோல் நிறை புனலில்

நிறுத்தி வைத்து தேங்காய் வாங்கு

மற்றை மதி நுதல் மடவார் குற்றஞ் செய்தால்

மண் கடகம் ஏற்றியபடி வழக்கு நோக்கி

இத்தகைய இராசாங்கம் செய் நீ என்றே இரத்னமணி

ஆசனத்தில் இருத்தி வைத்தான்.'

இதன்படி, ஆலயப் பணி செய்பவர்கள் அவரவர் வழமைப் பிரகாரம் பணி செய்கின்றார்களா? என்பதைப் பார்த்து அவர்கள் குற்றஞ் செய்தால் விலங்கிட்டு கசையடி கொடுக்க வேண்டும். உயிர் பறிக்கப்படும் குற்றஞ் செய்தால் மரண தண்டனை கொடுக்க வேண்டும்.



நடனமாடும் பெண்கள் குற்றஞ் செய்தால் நிறைந்த நீரினுள்ளே நிற்க வைத்து தேங்காய் வாங்குதல் வேண்டும். (இது ஒரு வகையான தண்டனையாகும்.) ஏனைய பெண்கள் குற்றஞ் செய்தால் தலையில் மண் நிறைந்த கடகத்தை ஏற்றி வைத்து அவற்றின் குற்றித்திற்கேற்ப கசையடி கொடுக்க வேண்டும்.

இவ்வாறு நீதி முறைகளை குளக்கோட்டன் வகுத்தமையினால் மனுநீதி கண்ட சோழனின் மரபில் வந்தவனாக கருதினர்,



. யாழ்ப்பாண வைபவ மாலையில் மனுநீதி கண்ட சோழன் மகன் குளக்கோட்டன் திருகோணமலையை அடைந்து கோணேசர் ஆலயத்தை தரிசித்து தம்பலகாமத்தின் பழுதுபட்டுக் கிடந்த சிவாலயத்தை திருத்திக் கட்டினான். என்று கூறப்படுகின்றது.

ஆய்வாளர் க.தங்கேஸ்வரி, குளக்கோட்டன் சோழவம்சத்தை சேர்ந்தவன் எனக் கொள்ளலாமே தவிர, மனுராசா என்றோ, மனுநீதி கண்ட சோழன் மகன் என்றோ சொல்வது ஏற்றுக்கொள்ளமுடியாது என்கிறார்.

சமய ரீதியிலே தெய்வங்களை அவதாரங்களாக கருதுகின்ற நிலை எமது தொன்மையான இலக்கியமரபாக வளர்க்கப்பட்டு இன்று வரை வழக்கில் உள்ளது.


எஸ்.பிரகாஷ் (MA)
ஆசிரியர்,
தி/ நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி,
திருகோணமலை.

தொடரும் ..

### பல்லவர் கால கலையம்சம் கொண்ட

# 'நாலந்த சிலை மண்டபம்'

நாலந்த சிலை மண்டபம் (Nalanda Gedige) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இலங்கை நில அளவைத் திணைக்களம் இலங்கையின் மையப்பகுதியென (7.6699136N, 80.6458444E) உறுதிப்படுத்திய இடம் இதுவாகும்.



A9 பிரதான வீதியில், தம்புள்ளைக்கு தெற்குப் பக்கமாக 20 கி.மீ தூரத்தில், பிரதான பதையில் இருந்து கிழக்கே 1கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது இந்த நாலந்த கெடிகே என்னும் சிலை மண்டபம்.

இயற்கையின் அரவணைப்பில் குளத்தால் (Bowatenne Tank) சூழப்பட்டு அமைதியாகக் காட்சிதரும் இந்த வணக்கத்தலம் வரலாற்றைத் தேடும் ஆர்வலர்களையும், சுற்றுலாப் பயணிகளையும் கவருமிடமாக இருக்கிறது. இக்கட்டிடம் பல சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்டது.

01. இக்கட்டிடம் அமைந்துள்ள இடம் இலங்கையின் மையப்பகுதியாகும்.
02. இங்குள்ள சிற்பங்கள் இந்து - பௌத்த அடையாளச் சின்னங்களைக் கொண்டமைந்துள்ளன.
03. பல்லவ கட்டிட கலையம்சம் கொண்ட இக்கட்டிடமானது தாந்திரிக் எனப்படும் மகாயான பௌத்த சிறப்பு வடிவமைப்பைக் கொண்டது.
04. 8ம் – 10ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இது கட்டப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.



05. இந்து - பௌத்த கலாச்சாரத்தை இணைத்து கட்டப்பட்டிருந்தும் ஒப்பிடும்போது பெருமளவுக்கு அறியப்படாத ஒரு தொல்லியல் சின்னமாகவே இது உள்ளது குறிப்பிடத்தக்கது.
06. இங்கு காணப்படும் சிலைகளில் குபேரன் சிலை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
07. மேற்குறித்தவற்றுடன் இன்னுமொரு சிறப்பும் இதற்குள்ளது. அதாவது இப்போது நாம் பார்ப்பது நகர்த்தப்பட்டு, மீளமைக்கப்பட்ட கட்டிடமாகும்.

1970 களில் இலங்கை அரசினால் முன்னெடுக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த நினைவுச் சின்னம் இருந்த இடம் முற்றாகவே நீருக்குள் அமிழ்ந்து அழியும் நிலை ஏற்பட்டது.

தொடரும் ..

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## சினிமா குறுஞ்செய்திகள்

- **இனி முன்னணி இயக்குனர்களின் படங்களிலும் நடிப்பேன்**

இதுவரை காலமும் புதுமுக இயக்குனர்களின் படங்கிளில் மட்டுமே நடித்து வந்த நந்திதா தான் முன்னணி இயக்குனர்களின் படங்களிலும் நடிக்கவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

- **போங்கடி நீங்களும் உங்க காதலும்**

உதவி இயக்குனராக இருந்த ராம கிருஷ்ணன், தானே தனக்காக இயக்கி நடித்த படமான போங்கடி நீங்களும் உங்க காதலும் திரைப்படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

- **விஜய்சேதுபதி கிடைக்காத சுனைனா**

விஜய்சேதுபதி தன்னுடைய ஒரு படத்திற்கான அழைப்பை சுனைனாவுக்கு விடுத்த போது பிஸியாக இருந்த அவர் ஓடோடிச் சென்றுள்ளார் விஜய் சேதுபதிக்காக.

இருந்த போதிலும் கதையில் வரும் இன்னொரு கதாபாத்திரத்திற்கே தன்னை ஜோடியாக போட்டுள்ளதை அறிந்தும், விஜய் சேதுபதியும் அப்படத்தில் நடிக்க விருப்பதால் கால்ஷீட் கொடுத்துள்ளார் சுனைனா.



- **கார்த்தியின் தலப்பாகட்டு**

பிரியாணி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து கார்த்தியை வைத்து வெங்கட்பிரபு மீண்டும் தலப்பாகட்டு எனும் படத்தை இயக்கவுள்ளார்.



- **நீக்கப்படும் அமலா போல்**

இயக்குனர் விஜயை காதல் திருமணம் செய்து கொள்ளவிருப்பதாக பத்திரிகையொன்றில் வெளியான செய்தியினை அடுத்து தயாரிப்பாளர் தமது படத்தில் இருந்து விலகுமாறு அமலா பாலைக் கேட்டுள்ளார்.

- **காமெடியன் சீனிவாச ரெட்டிக்கு ஜோடி**

பல வதந்திகளை அடுத்து தான் அமெரிக்கா செல்லவுமில்லை, அங்கு யாரையும் திருமணம் செய்யவுமில்லை எனக் கூறிய போதிலும் அஞ்சலிக்கு பட வாய்ப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை.

எனவே காமெடியனான சீனிவாச ரெட்டிக்கு ஜோடியாக நடித்து மீண்டும் திரைக்கு வர இருக்கிறார் அஞ்சலி.

## 30 கோடி – அதிர்ச்சி



பிரபுதேவா சம்பளம் ரூ.30 கோடியாக உயர்ந்துள்ளது. அடுத்து அவர் இயக்கப்போகும் இந்தி படத்துக்குதான் இவ்வளவு தொகை வாங்குகிறாராம். இதனால் இந்திபட உலகினர் அதிர்ச்சியடைந்துள்ளனர். வேறு எந்த இந்தி இயக்குனரும் இவ்வளவு தொகை சம்பளம் வாங்கியதில்லையாம்.

இந்தி டைரக்டர் ரோஹித் ஷெட்டி வாங்கிய ரூ.20 கோடிதான் அதிகபட்சமாக இதுவரை இருந்து வந்தது. இப்போது அவரையும் பிரபுதேவா மிஞ்சி விட்டார். இவர் வாங்கும் சம்பளம் இந்தியில் முன்னணி கதாநாயகர்கள் சம்பளத்துக்கு இணையானது என்கின்றனர்.

பிரபுதேவாவை இந்தி திரை உலகம் பெரிய டைரக்டராக கொண்டாடுகிறது. இவர் இந்தியில் சல்மான்கானை வைத்து 'வாண்டட், அக்ஷய்குமாரை வைத்து ரவுடி ரத்தோர், கிருஷ்குமார், சுருதிஹாசன் ஜோடியாக்கி ராமையா வஸ்தாவையாஇவ்வாறான பல படங்களை எடுத்துள்ளார்.

## நித்தியா மறுப்பு – இயக்குனர் கெஞ்சல்



கால்ஷீட் தர மறுத்த நித்யா மேனனிடம் கெஸ்ட் ரோலில் நடிக்க கேட்டு கெஞ்சினார் பெண் இயக்குனர். இவரிடம் பெங்களூர் டேஸ் என்ற மலையாள படத்தில் நடிக்க கால்ஷீட் கேட்டு இயக்குனர் அஞ்சலி மேனன் அணுகினார்.

மலையாளத்தில் ஏற்கனவே நித்யா மேனன் நடித்த படங்கள் ஹிட் ஆகி இருந்ததால் அவரை எப்படியாவது தனது படத்தில் நடிக்க வைக்க எண்ணினார் இயக்குனர். கெஸ்ட் ரோலிலாவது நடிக்க வேண்டும்? என்று கெஞ்சினார். எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் அஞ்சலி வற்புறுத்திய வண்ணம் இருந்ததால் கெஸ்ட் ரோலில் நடிக்க சம்மதித்தாராம் நித்யா.

## இசையில் குதிக்கும் ஸ்ரீ

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட ஸ்ரீசாந்த் நடிகர், இசை அமைப்பாளராக மாறினார். கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ஸ்ரீசாந்த் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் கிரிக்கெட் விளையாட தடை விதிக்கப்பட்டது.

அடுத்து என்ன செய்யப்போகிறார் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் நடிகராக மாறிவிட்டார். நான் ஈ பட வில்லன் சுதீப் நடிக்கும் புதிய கன்னட படமொன்றில் நடிக்க ஸ்ரீசாந்துக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இதுதவிர எஸ் 36 என்ற இசை குழு ஒன்றையும் உருவாக்கி இருக்கிறார். இதன் மூலம் பாடல் ஆல்பம் ஒன்றை சமீபத்தில் வெளியிட்டார். சினிமா படங்களுக்கு இசை அமைக்க முடிவு செய்துள்ள ஸ்ரீசாந்துக்கு மைத்துனரும், பாடகருமான மது பாலகிருஷ்ணா உடனிருந்து உதவி வருகிறார்.

## பொறாமையில் சக நடிகைகள்

ஒரே நேரத்தில் தமிழ்சினிமாவின் உச்ச நடிகரோடும், அல்டிமேட் நடிகரோடும் ஜோடி சேர்ந்த சந்தோஷத்தில் இருக்கிறார் தாண்டவ நாயகி.

தமிழில் ஒரு படம்கூட வாய்ப்பு இல்லாததால் தன்னோட சினிமா வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டது என்று எண்ணிக்கொண்டிருந்த வேளையில், அடுத்தடுத்து டாப் ஹீரோக்களிடம் நடிக்க வந்த வாய்ப்பால் திக்குமுக்காடி போய்விட்டாராம் நடிகை. இவரது இத் திடீர் வளர்ச்சி கண்டு இவருடைய சக நடிகைகள் கலங்கிப் போயுள்ளார்களாம்.

## இனி இல்லை – நஸ்ரியா

குறும்புத்தனமான நடிப்பால் ரசிகர்களை கவர்ந்தவர் நடிகை நஸ்ரியா நசீம். ஜெய்யுடன் இவர் நடித்த திருமணம் எனும் நிக்காஹ் படம் விரைவில் வெளியாக இருக்கும் நிலையில், அதற்கு அடுத்தப்படியாக அவரது எந்த படங்களிலும் கமிட்டாகவில்லை. 19 வயதான நஸ்ரியாவுக்கும், மலையாள இயக்குநர் பாசில் மகனும், நடிகருமான பகத் பாசிலுக்கும் காதல் மலர்ந்தது. இவர்களது காதலுக்கு இருவரது பெற்றோரும் சம்மதம் சொல்ல இருமாதங்களில் திருமணம் நடைபெற இருக்கிறது.




இந்நிலையில் திருமணத்திற்கு முன்பாக படங்களில் நடிக்க வேண்டி நஸ்ரியாவுக்கு அழைப்பு வந்துள்ளது. அப்படி கிட்டத்தட்ட 6 படங்கள் வரை அவருக்கு வாய்ப்பு வந்துள்ளது. இதில் மூன்று தெலுங்கு படங்களும், மூன்று தமிழ் படங்களும் அடங்கும். அவை எல்லாவற்றையும் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டாராம் நடிகை நஸ்ரியா.

## அஜித் – ஆர்யா ஜோடி

தொழில் வேறு, தனிப்பட்ட வாழ்க்கை வேறு என்பதில் தெளிவாக இருப்பவர் தல அஜித். கடந்த சில வருடங்களாக இப்படி ஒரு கொள்கையை அவர் வைத்திருப்பதால் சினிமா பர்சனாலிட்டிகளிடமும் அதிக நெருக்கத்தைக் காட்டாமல் தள்ளியே இருப்பார் அஜித்.

அதிகபட்சம் நேரில் சந்திக்க நேரும்போது ஹலோ.. ஹாய்.. என குசலம் விசாரிப்பார் அஜித். அப்பேற்பட்ட அஜித்திடம் சமீபகாலமாக மாற்றம் தெரிவதாக கூறுகின்றனர் அவருக்கு நெருக்கமானவர்கள்!.

அப்படி அஜித் அண்மையில் அதிகமாக அன்பு செலுத்துவது ஆர்யா மீதுதானாம். ஆர்யா என்ன சொன்னாலும் அஜித் தட்ட மாட்டார் என்கிற அளவுக்கு அஜித்-ஆர்யா நட்பு படு ஸ்ட்ராங்காக இருக்கிறதாக சொல்கிறார்கள். அஜித் உடனான தன் நட்பை பயன்படுத்தி, அஜித்திடம் சிபாரிசு செய்து அவரை கதை கேட்க வைத்தது மட்டுமல்ல, அஜித்தின் கால்ஷீட்டையும் வாங்கிக் கொடுத்திருக்கிறார் ஆர்யா.



## ஆக்ஷன் ஹீரோவாக !!



மெரீனா படம் தொடங்கி மான் கராத்தே வரை சிவகார்த்திகேயன் நடித்தது எல்லாமே காமெடி படங்கள்தான். அவர் நடித்த வேடங்களும் காமெடி வேடங்களே.

அவர் நடித்த மான் கராத்தே படமோ வருத்தப்படாத வாலிபர் சங்கம் அளவுக்கு வெற்றியடையவில்லை. அதை வைத்து அவரது நலன்விரும்பிகள் சிவகார்த்திகேயனுக்கு அட்வைஸ் செய்திருக்கிறார்கள். அதாவது தொடர்ந்து காமெடி வேடத்திலேயே நடித்து வந்தால் ஆபத்தாகிவிடும் என்பதே அவர்கள் செய்த அட்வைஸ்.

அடுத்து நடிக்கும் படங்களில் தன் பாணியை மாற்ற இருக்கிறாராம். தனுஷ் தயாரிப்பில் எதிர்நீச்சல் இயக்குநர் துரை செந்தில்குமார் இயக்க உள்ள டானா படம் ஆக்ஷன் சப்ஜெக்ட்டாம். அந்தப் படத்தில் போலீஸ் அதிகாரி கேரக்டரில் நடிக்க இருக்கிறார் சிவகார்த்திகேயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சூப்பர் பக்ஸ் - செயலிழக்கும் மருந்து

உலகம் ஆண்டிபயாடிக்ஸ் எனப்படும் நோய் எதிர்ப்பு மருந்துகளின் காலத்துக்குப் பிந்தைய ஒரு காலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று உலகச் சுகாதார நிறுவனம் எச்சரித்திருக்கிறது. இத்தகைய ஒரு காலகட்டத்தில் மக்கள் சாதாரண தொற்றுக்களாலும் சிறிய காயங்களாலும் உயிரிழக்கக்கூடிய ஒரு நிலை மீண்டும் உருவாகும் நிலை வரலாம் என்று அது கூறுகிறது.

சூப்பர் பக்ஸ் எனப்படும் நோயை உண்டாக்கும் கிருமிகள் உருமாறி மிகவும் சக்தி வாய்ந்த ஆண்டிபயாடிக்ஸ்களிடமிருந்துகூட தப்பித்துக்கொள்ளும் நிலையை எட்டியிருப்பதாகவும், இது இப்போது உலக அளவில் ஒரு பெரும் அச்சுறுத்தலைத் தோற்றுவிப்பதாகவும் உலகச் சுகாதார நிறுவனம் ஆண்டிபயாடிக்ஸ் செயலற்றுப் போகும் நிலை குறித்து வெளியிட்டுள்ள முதல் உலகளாவிய அறிக்கையில் கூறுகிறது..

## சாதனைப் பயணத்தை நோக்கி

மொபைல் சாதனங்களின் மூலம் தொடர்புகளை ஏற்படுத்த உதவும் WhatsApp அப்பிளிக்கேஷனை சில மாதங்களுக்கு முன்னர் பேஸ்புக் நிறுவனம் கொள்வனவு செய்திருந்தது. இதன்பின்னர் இந்த அப்பிளிக்கேஷன் பாவனையாளர்களின் எண்ணிக்கை சடுதியாக உயரத்தொடங்கியுள்ளது.

தற்போது 500 மில்லியனிற்கும் அதிகமான பயனர்களைக் கொண்டு சாதனைப்பயணத்தை தொடர்கிறது WhatsApp அப்பிளிக்கேஷன். கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் 100 மில்லியனாக காணப்பட்ட பயனர் எண்ணிக்கை நான்கே மாதங்களில் 500 மில்லியனை எட்டியுள்ளது.

இதேவேளை நாள்தோறும் 700 மில்லியனிற்கும் அதிகமான புகைப்படங்கள் பகிரப்படுவதுடன், 100 மில்லியன் வரையான வீடியோக்களும் பகிரப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுப் பையன்

## கணனி வேகமாக இயங்க !!

கம்ப்யூட்டர் பாவிக்கும் போது நிறைய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். கம்ப்யூட்டர் பூட்(BOOT) ஆகுவதற்கு அப்பிளிகேஷன்ஸ் ஓபன் (APPLICATION OPEN) பண்ணுவதற்கு நீண்ட நேரம் எடுக்கும். ஆகவே கீழ்வரும் சில வழிமுறைகளை கடைப்பிடிப்பதால் கணனியின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

- கணனி பூட் (Boot) ஆகி முடியும் வரை எந்த அப்பிளிகேஷனையும் ஓப்பன் பண்ணுதல் கூடாது.
- ஏதாவது ஒரு அப்பிளிக்கேஷனை குளோஸ் பண்ணும் போது ரிப்பிரஷ் f5 கொடுத்தால் தேவையல்லாத பைல்கள RAM இருந்து நீக்கப்படும்.
- டெக்ஸ்டோப்பில் பெரிய அளவிலான படங்களை வோல்பேப்பராக போடுவதை தவிர்த்தல் வேண்டும்.
- டெக்ஸ்டோப்பை ஷாட்கட்களால் நிரப்பி வைக்க கூடாது.
- எப்போழுதும் ரிஸக்கல்பீன்குள் இருக்கும் அழித்த பைல்களை அதற்குள்ளும் இருந்து நீக்கி விட வேண்டும்.
- தினமும் இன்டநெட் டெம்பரி பைல்களை அழித்து விடுதல்.
- இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை டீபோறோமன்ட் (Defragment) செய்வதன் மூலமாக் ஹாட்டிஸ்கில் இருக்கும் இடைவெளிகள் சரி செய்யப்படும்.
- ஹாட்டிஸ்கை இரு பார்டிஸ்சனாக பிரித்து வைப்பதால் சிஸ்டம் பைல்களும் மற்றையதில் அப்பிளிகேஷன் பைல்களையும் இன்ஸ்ரோல் செய்ய முடியும்.




## சூரிய ஒளி இணையம்

இலண்டனில் உள்ள எடின்பர்க் பல்கலைக்கழகத்தில், இண்டர்நெட் இயங்கவும் தகவல்களைப் பரிமாறவும் இனி சூரிய சக்தியே போதும் என்பது குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. பகலில் கிடைக்கும் வெளிச்சத்தைப் பயன்படுத்தி சூரிய சக்தித் தகடுகள் மூலம் உலகளாவிய வலையின் சமிக்ஞைகளைக் கண்டறியவும் தகவல்களைப் பரிமாறவும் அவசியமான தொழில்நுட்பத்தை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது இந்தப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுத் துறை.

கேபிள்கள் மூலம் இணைக்கப்படாத ஒதுக்குப்புறமான பகுதிகளிலும் இனி இணையத்தை இயக்கலாம். இணையம் வேலை செய்யத் தேவையான ஆற்றலையும் சூரிய சக்தித் தகடுகள் வழங்கும். அதைப் போலவே இணைய தகவல்களைப் பரிமாறவும் அதே தகடுகள் உதவும். இந்த இரண்டினையும் சூரியசக்தி தகடுகளைக் கொண்டே முடித்துவிட முடியும் என நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்தத் தொழில்நுட்பம் நடைமுறைக்கு வந்துவிட்டால் நெருக்கடி நேர நிலைமைகளை எளிதில் சமாளிக்கலாம். கரண்ட் போய்விட்டால் கம்யூட்டரை இயக்க முடியாது என்னும் நிலைமை போயே போய்விடும்.

இந்தத் தொழில்நுட்பத்தை லை.ஃ.பை (Li-Fi) என அழைக்கின்றனர். சூரிய சக்தி மூலம் எல்.இ.டி. பல்புகளை எரியவைத்து அதன் வழியே தகவல்களைப் பரிமாறத் திட்டமிட்டுள்ளார்கள்.

எடின்பர்க்கில் நடைபெற்ற சர்வதேச அறிவியல் திருவிழாவில் தகவல் தொடர்புத் துறையின் பயோனியரான பேராசிரியர் ஹரால்ட் ஹாஸ் இந்தத் தொழில்நுட்பம் குறித்து விரிவுரை வழங்கியிருக்கிறார்.

## ஒரு கொலையின் கதை

2-9

மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

ஆறுதலாக இரண்டு கைகளையும் பாவித்து மெதுவாக அந்தப் பொலித்தீன் பையின் சுருக்கை விடுவித்து உள்ளிருந்த பொருளை வெளியில் எடுத்த போது தான் தெரிந்தது அது இரத்தக் கறையுடன் கூடிய கத்தியொன்று என......

புலனாய்வாளர்களுக்குப் புலனானது...

இரத்தக் கறையுடன் கூடிய கத்தியொன்றை ஒளித்து வைத்திருக்க வேண்டிய தேவையென்ன அலிகவிற்கு இருக்கின்றது....? அந்த இரத்தக் கறை யாருடையது...?

அவர்கள் தேடிய முக்கிய தடயப்பொருளொன்றில் அந்தக் கத்தியும் உள்ளடங்கி விட்டதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்.... அக் கத்தியை அவர்கள் மிகக் கவனமாக உரிய பையுடனேயே பத்திரப்படுத்திக் கொண்டார்கள்.

கொலைக்குப் பயன்பட்ட கத்தியை இல்லாமற்செய்யாமல் அல்லது அழித்துவிடாமல் அதனைப் பத்திரப்படுத்திக்கொண்ட அலிகவின் முடிவை அவனின் அசாத்தியத் துணிவு என்பதா அல்லது மடமைத் தனம் என்பதா?

கொலைஞர்கள் எப்போதுமே மிகச் சிறிய தடயமொன்றை விட்டுச் செல்வார்கள் என்பது உலகப் பொது நியதி என நாம் ஏற்கனவே பார்த்திருந்தோம். ஆனாலும் மிக முக்கிய தடயமொன்றை விட்டுச் செல்லும் அளவிற்கு அல்லது தம்முடன் வைத்திருப்பதற்குக் காரணம் என்ன?

கொலைஞர்களின் அசாத்தியத் துணிவும் அவர்களின் திட்டமிடலில் அவர் எள்ளளவேனும் சந்தேகம் அற்றிருப்பதுமே அதற்கான காரணங்கள் ஆகும் எனலாம்...

கேதீஸின் கொலை நடந்த போது கொலையைச் செய்தவர்கள் தம்மீது எள்ளளவேனும் சந்தேகம் எழாதபடியே தமது கொலைத் திட்டத்தைத் தயாரித்து இருந்தனர். அத்துடன் அக்காலத்தில் நிலவிய அசாத்திய சூழ்நிலை அவர்களுக்குச் சாதகமாக இருந்ததுடன் கொலை தொடர்பாக புலனாய்வு செய்பவர்களின் பார்வையைப் பலகோணங்களில் திருப்பிவிடும் வாய்ப்பையும் அக் காலத்தில் நிலவிய அசாத்திய சூழல் ஏற்படுத்தியிருந்தது.

அவற்றைக் கொண்டு சந்தேகநபர்கள் தம்மீது சந்தேக வட்டம் எவ்விதமாகவும் வராது என்பதில் உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருப்பின் அவர்களுக்கு எழும் அசாத்தியத் துணிவால் கொலைத் தடயப் பொருட்களை தம்முடன் வைத்திருப்பதற்கு அவர்கள் தயங்குவதில்லை.

இலங்கையின் சட்ட ஏற்பாடுகளை எடுத்து நோக்கினால் கொலையொன்று நடைபெற்ற சந்தர்ப்பத்தைப் பொறுத்தே அதற்கான தண்டனைகள் வழங்கப்பட்டிருப்பதை காணமுடியும்.

கொலைச் சந்தேகநபர்களின் குற்றங்கள் நிரூபிக்கப்படும் இடத்து, கொலை நடந்த போது அக் கொலைஞர், அக் கொலையை திட்டமிட்டுச் செய்தாரா? அல்லது தற்காப்பிற்காகச் செய்தாரா என்பதை நீதித்துறை அவதானிப்பதைப் பார்க்கலாம் அதனடிப்படையில் தற்காப்பு அல்லது திட்டமிடப்படாத கொலைகளுக்கு தண்டனையானது 10 வருடத்திற்குட்பட்ட சிறைத் தண்டனையாக அல்லது 20வருடங்களைக் கொண்ட ஆயுள் தண்டனையாக வழங்கப்படுவதையும், கொலை திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்டிருந்தால் அதற்கு அதியுச்சத் தண்டயையாக மரண தண்டனை விதிக்கப் படுவதையும் காணலாம்....

புலனாய்வாளர்கள் அந்தக் கத்தியைப் பத்திரப்படுத்திக் கொண்டனர். இன்னும் முக்கியமான ஏதோவொன்று எஞ்சியிருப்பதான உணர்வு அவர்களிடம் இருந்தது.

அந்த அறையில் எஞ்சியிருப்பது கணணியொன்றே. மேசைமேற் கணிணியான அது தூசு படிந்து காணப்பட்டது. அக்கணணி வைக்கப்பட்டிருந்த மேசை இரண்டு இலாச்சிகளைக் கொண்டிருந்தது.

அந்த மேசை மேற் கணணியை மின்னைக் கொடுத்து உயிர்ப்பித்த போது அது தொழிற்பட ஆரம்பித்தது.

விண்டோஸ் எக்ஸ்பி இயங்கு முறைமையைக் கொண்டிருந்த அக்கணணி [illegible] நேரடியாகவே [illegible] சியத்தை புலனாய்வாளர்களுக்காகத் திறந்தது.

அலிகவினதும் அவனது மனைவியின் பெயரிலும் தனியான இரண்டு கோப்பகங்கள் இருப்பதை புலனாய்வாளர்கள் அவதானித்தனர். அவர்கள் அவற்றைத் திறந்தபோது பல வோர்ட் கோப்புக்களும், அவர்களது குடும்பப் படங்கள் நிறைந்த கோப்புக்களும் இருந்தன.

அவற்றுள் ஏதாவது சந்தேகத்திற்கிடமானவிடயங்கள் இருக்கினறனவா? என்பதைத் தெரிந்து கொள்ள போதுமான நேரம் அப்போது அவர்களுக்கு இல்லை....

அக் கணணியின் திரையில் தொடர்பாடல் மென்னுறுப்புக்கள் ஏதாவது பதிவிடப்பட்டுள்ளதா என்பதை அவர்கள் தோண்டத் தொடங்கினார்கள்.... அவ்வகை மென்னுறுப்புக்கள் எவையும் அக் கணணியில் பதிவிடப்படவில்லை...

" முக்கியமான விடயங்களை அழித்திருப்பாரா?" புலனாய்வாளர் ஒருவரின் கேள்வி காற்றில் அலைந்தது.....

மற்றையவர் சிறிது நேரத்தின் பின்னரே பதிலளித்தார்.... . "வாய்ப்பில்லை... தன்னைச் சுற்றி வளையம் இறுகுவதை அவர் அறிந்திருக்கவில்லை தானே... அத்துடன் கணணியின் வரலாற்றை பாருங்கள்"

"இக்கணணி பெரிதாகப் பயன்பட்டதற்கான எவ்வித அறிகுறிகளும் இல்லை.... எனவே அழிப்பதற்கான சாத்தியங்கள் மிக்க் குறைவு .. அத்துடன்...." அவர் சிறிது நேரம் வாயை மூடிக்கொண்டார். ஆனால் அவரது கைகள் அவர்களால் கைப்பற்றப்பட்ட கத்திப் பொதியின் பாற் சென்றது.

"இதனையே அழிக்காமல் வீட்டிற்குள் வைத்திருக்கும் அவர் கணணித் தொடர்புகளை அழித்திருக்க ஞாயமில்லையே" என்றார்.

சிறிது மௌனத்தின் பின் "வன்தட்டைக் கழற்றிச் செல்லுவோம்" என்ற முடிவிற்கு இருவரும் வந்தார்கள். ஒருவர் வன் தட்டைக் கழற்றும் பணியை ஆற்ற மற்றையவர் அந்த மேசையின் இரண்டு இலாச்சிகளையும் சல்லடையிடத் தொடங்கினார்.

அங்கு அவருக்கு அடுத்த தடயமொன்றை வழங்கும் கையேடு ஒன்று காத்துக் கிடந்தது....

அக் கையேடு சொனி வகை மடிக் கணணியொன்றின் கையேடாக இருந்தது....

அக் கையேடு தான் இக் கொலைக் குற்றத்தின் மூன்றாவது சந்தேக நபரை உலகிற்கே வெளிக் கொண்டுவந்த இரண்டு தடயங்களில் ஒன்றைத் தன்னகத்தே வைத்திருந்த மடிக்கணணியை புலனாய்வாளர்களுக்கு காட்டிக் கொடுத்தது.

ஆனால் அந்த மடிக்கணணி அந்த அறையில் இருக்கவில்லை.......

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "மாநகரசபை ஊழியரின் முயற்சியால் உருவானதே பாட்டாளிபுரம் மைதானம்"

மட்டக்களப்பு மாநகர சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் மைதானமானத்தின் அபிவிருத்திக்காக இவ்விளையாட்டு



உழைப்பும் வியர்வையுமே இம் மைதானத்தின் உருவாக்கத்திற்கு உரமாக்கப்பட்டுள்ளது என்று மண்முனை வடக்கு பிரதேச செயலக முன்பாக அமைக்கப்பட்டுள்ள பாட்டாளிபுரம் விளையாட்டு மைதானத்தினை கடந்த சனிக்கிழமை வைபவ ரீதியாக திறந்துவைத்து உரையாற்று கையிலேயே மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார் மேற்கண்டவாறு கூறினார்.

எந்த ஒரு நபரிடமும் நிதி உதவிகள் கோரப்படாமல் முற்று முழுவதுமாக எமது மாநகர சபை எல்லைக்குட்பட்ட வரியிறுப்பாளர்களின் பணத்திலிருந்து பெற்றுக்கொண்ட இரண்டு மில்லியன் ரூபாய் நிதியினூடாகவே இம்மைதானம் அமைக்கப்பட்டதெனவும் கூறினார்.

(உதயகாந்)

## ஆலையடிவேம்பில் சித்திரை விளையாட்டுப் போட்டி

சித்திரைப்புத்தாண்டினை சிறப்பிக்குமுகமாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தினால் அண்மையில் தருமசங்கரி மைதானத்தில் நடாத்தப்பட்ட சித்திரைப்புத்தாண்டு விளையாட்டு விழாவில் அதிதிகள் வரவேற்கப்படுவதையும், பிரதேசத்திற்கு பெருமை சேர்க்கும்வண்ணம் கல்வியில் சாதனைபடைத்த மாணவருக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.விமலநாதன் நினைவுச்சின்னம் வழங்கி வைப்பதனையும் படங்களில் காணலாம். (உதயகாந்த்)





## கங்குவேலி பாலர் பாடசாலைக்கு உதவிகள்

காலஞ்சென்ற திருமதி கமலா.வின்சிலோ நினைவாக இலண்டனில் வசிக்கும் அவரது மகன் சம்சன் வின்சிலோ அவர்களால் வழங்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான மைதான விளையாட்டு உபகரணங்கள், பாடசாலை கற்பித்தல் உபகரணங்கள் போன்றவற்றை திருகோணமலை நகராட்சிமன்ற உறுப்பினர் சி.நந்தகுமார் மூதூர், கங்குவேலி பாலர் பாடசாலை நிர்வாகிகளிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.






# குறுக்கெழுத்து புதிர் 007

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | 17 | 18 |
| | | | 3 | | | | | 4 |
| | 5 | 19 | | 6 கா | 20 | | | 7 |
| 21 | | | | 8 | | 9 | பு | |
| | 22 | | | | | | | |
| | ம் | 10 | 23 | 11 | | 24 | | 25 |
| | | 12 பா | | | 13 | ல | 26 | |
| 14 | | | | | | | | |
| | 15 | | 16 | | | | | ம் |

## மேலிருந்து கீழாக

1. இதைக் கண்டால் நாயைக் காண முடியாது
2. கல்லை ஆயதமாகப் பயன்படுத்தத் தொடங்கிய காலம்
5. முதன்முதலில் விண்வெளிக்குச் சென்ற மிருகத்தின் பெயர்
9. பட்டங்களில் ஒலி எழுப்பக் கட்டுவது
17. புனர்வாழ்வளிக்கப்படும் இடம்
18. இவன் பேச்சு விழந்தால் போச்சு -குழம்பியுள்ளது.
19. திருமலை மட்டக்களப்பு வீதியில் பிரதான பாலங்களில் ஒன்று- 'இ' மறைந்துள்ளது.
20. …….. ஒரு கதம்பம். -குழம்பியுள்ளது
21. பாண்டவரில் மூன்றாமவன் - இறுதி எழுத்து குழம்பியுள்ளது.
22. பட்சணங்களை இப்படியும் அழைக்கலாம் குழம்பியுள்ளது
23. படகைச் சொல்லலாம்
24. புரட்சி
25. கணக்குப் பாடம்
26. கம்பன் எழுதும் இலக்கியம்

## இடமிருந்து வலமாக

1. உறக்கத்தில் வருவது
2. மறைந்திருந்து தாக்குவது
3. தமிழரின் ஆதிகாலப் பெண் தெய்வம்
4. போத்தில் எனும் சொல்லுக்கான சரியான தமிழ்ச் சொல் - வலமிருந்து இடமாக உள்ளது
5. மின்சாரத்தை உருவாக்கும் காற்று இயந்திரம் - வலமிருந்து இடமாக உள்ளது
6. பூவைத் தாங்கி நிற்கும் பகுதி
7. ஆண்கள் கையில் அணிவது- பெண்கள் அணிவதையும் குறிக்கும் - வலமிருந்து இடமாக உள்ளது
8. கிளியின் சொண்டு
9. குதிரை - குழம்பியுள்ளது
10. தடி - வலமிருந்து இடமாக உள்ளது
11. காதில் அணிவது - குழம்பியுள்ளது
12. குழந்தை - வலமிருந்து இடமாக உள்ளது
13. யன்னல்
14. இலகு - குழம்பியுள்ளது
15. தொடையமகி
16. இந்தியாவில் கடல் நடுவில் கட்டப்பட்டுள்ள பாலம் -குழம்பியுள்ளது

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250, ரூபா 150, ரூபா 100

போட்டி முடிவுத் திகதி : 08.05.2014

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல - 199,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

## குறுக்கெழுத்து புதிர் 006 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | ரி | ய | 17 த | 18 ரி | 2 சி | ல் | 19 ல | றை |
| 20 ணி | | 3 பு | ண் | 21 கா | ற் | 22 டை | ச | ட் |
| ண | 4 க | ண் | ட | ம் | 5 ப | ட் | ட | ம் |
| 6 க | ற் | ப | னை | 7 ய | ம் | ர | ம் | |
| | 8 க | 23 வ | ன் | 9 னா | தி | ஜ | ப | 24 தி |
| 10 வா | க | ன | ம் | அ | | ரா | | ரா |
| 11 க | ச | ம் | | 12 ர் | 25 ட | இ | | வி |
| 13 ம் | ட | ண் | அ | 26 க | 14 ம | ல | ம் | ட |
| 15 அ | ற | ம் | | 16 லி | ல் | அ | | ன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

1. பின்வரும் இலை வகைகளிடையே எண்ணெய் பெற உதவும் இலைவகை எது?
   1. மிளகு இலை 2. ராபு இலை 3. கறுவா இலை

2. பௌத்த மதத்தினர் புனித மரமாக கருதி வழிபடும் வெள்ளரசுமரம் காணப்படும் புராதன நகரம் எது?
   1. மிகுந்தலை 2. தம்புள்ள 3. கண்டி

3. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டி, சைக்கிள் ரியூப் போன்ற பொருட்களை கொள்வனவு செய்யும் போது, அவற்றின் தரத்தை எவ்வாறு அறியலாம்?
   1. ISO சான்றிதழ் 2. ISBN சான்றிதழ் 3. SLS சான்றிதழ்

4. மனிதருக்கும், பயிருக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு கிராமப் புறங்களில் பயன்படுத்தப்படும் தாவரம் எது?
   1. ஆமணக்கு 2. வேம்பு 3. கீழ்க்காய் நெல்லி

5. உணவு உண்ணும் வேளை கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார பழக்கவழக்கம் எது?
   1. வாயிலிருந்து சத்தம் எழாதவாறு உண்ணுதல்
   2. உடன் உணவு வகைகளை உண்ணுதல்
   3. உணவை மெல்லாது விரைவாக விழுங்குதல்.

6. “சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது” என்பதன் கருத்து என்ன?
   1. சூடு அதிகமுள்ள இடங்களை பூனை விரும்புவதில்லை
   2. எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்
   3. அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.

7. இலங்கையின் குருநாகல் மாவட்டத்தில் அதிகளவு கோதுமை பயிரிடப்படுவதால், கோதுமை மாவின் விலை குறைவடையும். இக்கூற்று பிழையானது இதற்குக் காரணம்?
   1. கோதுமை மாவின் விலை அதிகரித்துச் செல்லும்
   2. கோதுமை மாவின் விலையை குறைக்க முடியாது
   3. இலங்கையில் கோதுமையை பயிரிடமுடியாது

8. உயிர்கள் தூங்கும் இரவில்
   உலகை காவல் காக்க
   உயர்ந்த வானில் தோன்றி
   உலவும் விடியும் வரை

   இப்பாடலில் எதைப்பற்றி விவரிக்கப்படுகிறது?
   1. சூரியன் 2. சந்திரன் 3. இரவு

9. புத்தகமொன்றில் எப்போதும் இருப்பவை
   1. எழுத்து, சொற்கள், பக்கம் 2. எழுத்து, இலக்கம், படம் 3. எழுத்து, பக்கம், கருத்து

10. “எனது கிராமத்திலுள்ள அனைவரும் மிக உயரமானவர்கள். விமலா உயரமானவள். எனின், விமலா எனது கிராமத்தைச் சேர்ந்தவள்” என்ற இக்கூற்று பற்றி யாது கூறலாம்?
    1. உண்மை 2. பொய் 3. கூறமுடியாது

11. இலங்கையில் அண்மைக் காலமாக பொருட்களின் விலை அதிகரித்து வருகின்றது. இதற்குக் காரணம்?
    1. எரிபொருட்களின் விலை அதிகரித்தமை
    2. பொருட்களின் இறக்குமதி அதிகரித்தமை
    3. பொருட்களின் கேள்வி அதிகரித்தமை

12. தமிழ் இலக்கியம் தொடர்பான வினாக்களுக்கு விடையளிக்கும் போது முதலாவதாக செய்யவேண்டியது?
    1. கேட்கப்பட்ட வினாக்களுக்கு பாடலைத் தொடர்பு படுத்தி விடை எழுதுதல்
    2. இலக்கியப் பாடலை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளல்
    3. வினாக்களை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளல்.

13. “சிறு வயதில் கற்கும் கல்வியானது மனதில் நன்றாகப் பதியும்.” இக்கருத்தைத் தரும் பழமொழி எது?
    1. விளையும் பயிரை முளையிலே தெரியும்
    2. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
    3. இளமையிற் கல்வி சிலையிலெழுத்து

நான்கு மாணவர்கள் பரீட்சையொன்றில் பெற்ற புள்ளிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மாலா, விமலாவை விட 15 புள்ளிகளை கூடுதலாக பெற்றாள். எனினும் சர்மிளாவை விட 15 புள்ளிகள் குறைவாகவும் பெற்றாள். கலா, சர்மிளாவை விட 25 புள்ளிகள் குறைவாகப் பெற்றாள். விமலா பெற்ற புள்ளிகள் 60 எனில்,

14. கலா பெற்ற புள்ளிகள் எத்தனை?
    1. 60 2. 65 3. 75

15. ஆகக் கூடுதலாக புள்ளிகள் பெற்ற மாணவி யார்?
    1. சர்மிளா 2. கலா 3. விமலா

16. ஒரு சதுர வடிவான காணியின் சுற்றளவு 240மீ ஆகும். இக்காணியின் ஒரு பக்க நீளம் எவ்வளவு?
    1. 120மீ 2. 90மீ 3. 60 மீ



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**

**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# தன் வினை தன்னைச் சுடும்

**குட்டிக் கதை**

ஒரு ஊரில் ஒரு குயவன் அவன் தாய், மனைவி, மற்றும் மகனுடன் வாழ்ந்து வந்தான். குயவனின் மனைவிக்கு அவளது மாமியாரைப் பிடிக்கவில்லை. அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பத் துணிந்தாள். குயவனை தினமும் நச்சரித்தாள். அவனது அம்மாவை பக்கத்தில் ஒரு வீட்டில் குடியமர்த்தும் படி சொன்னாள். வெகு நாட்கள் குயவன் அவள் சொன்னதை காதிலேயே போட்டுக் கொள்ளாமல் இருந்தான்.

ஒரு நாள் குடியானவனுக்கு நச்சரிப்புத் தாங்க முடியவில்லை. அம்மாவைப் இருபது அடி தள்ளியிருந்த ஒரு வீட்டில் குடியமர்த்தினான். மனைவி மாமியாரிடம் குயவன் செய்த தட்டு ஒன்றைக் கொடுத்து, வேளாவேளைக்குத் தன் வீட்டுக்குத் தட்டை எடுத்து வந்தால் அதில் உணவு நிரப்பித் தருவதாகவும், அதை அவர் வீட்டுக்கு எடுத்துச் சென்று மகிழ்ச்சியாகச் சாப்பிடலாம் என்றும் கூறினாள்.

மாமியாருக்கு இது அவமானமாகத் தோன்றினாலும், தன் மகனுக்காக வாயைத் திறக்காமல் மருமகள் சொன்ன வழியில் வாழ்ந்து வந்தாள்.



பேரனுக்குப் பாட்டி வீட்டை விட்டுப் போனது அறவே பிடிக்கவில்லை. அவன் அம்மாவுக்குத் தெரியாமல் சில சமயம் பாட்டி வீட்டிற்குச் சென்று விளையாடுவான்.

அவன் வளர வளர குயவன் மண்பாண்டம் செய்வதைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான். சில சமயம் குயவன் வேலை செய்யாத போது அவனது இயந்திரத்தை மகன் இயக்கிப் பார்க்க ஆரம்பித்தான். ஒரு நாள் மகனுக்கு அப்பாவைப் போலவே மண்பாண்டம் செய்ய வந்தது.

அவன் முதல் முதலில் தன் அம்மாவுக்கு அருமையான தட்டு ஒன்றைச் செய்தான். அதை அவன் அம்மாவிடம் கொடுத்த போது அவள் மகனின் திறமையை நினைத்து பெருமைப்பட்டாள். தனக்கு அவன் முதலில் பொருள் செய்து கொடுத்ததை எண்ணி அளவில்லா மகிழ்ச்சி அடைந்தாள்.

தனது சிறிய மகனை இவ்வாறு கேட்டாள்: ‘மகனே! நீ செய்த தட்டு மிக அருமை. எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எத்தனையோ பாண்டங்கள் இருக்கும் போது ஏன் எனக்கு ஒரு தட்டைச் செய்து தர வேண்டும் என்று உனக்குத் தோன்றியது?”

மகன் குழந்தைத் தனமாகச் சொன்னான்: ‘அம்மா! ஒரு நாள் நான் அப்பாவைப் போலக் கல்யாணம் செய்து கொள்வேன். அப்போது நீ பாட்டியைப் போல பக்கத்து வீட்டுக்குப் போய் விடுவாய் அல்லவா. அப்போது உனக்கு என் மனைவி தினமும் சாப்பாடு கொடுக்க ஒரு தட்டு வேண்டுமல்லவா! அதைத்தான் உனக்கு நான் இப்போது செய்து கொடுத்தேன்”

குயவனின் மனைவி தான் செய்த காரியத்தை நினைத்து மிகவும் வருந்தினாள். மாமியாரை வீட்டுடன் வரவழைத்து மிகவும் அன்புடன் கவனித்துக் கொண்டாள்.

# சிறுவர் முரசு



**சிந்திக்க . . .**

**முடங்கிக் கிடந்தால், சிலந்தியும் சிறை பிடிக்கும்**
**எழுந்து நட,**
**எரிமலையும் வழி கொடுக்கும்.**

# குழந்தையின் தொடர் அழுகை??

கடந்த வார தொடர்ச்சி ...

அழும் நேரத்தில் குழந்தைகளை அரவணைப்பதோடு, அதற்கான காரணத்தை உடனடியாக கண்டறிய வேண்டும்.

இரவு நேரத்தில் தொட்டிலில் உறங்கும் குழந்தைகள் அழும்போது பசிக்காகத்தான் அழுவதாக நினைக்கும் தாய்மார்கள், அவசரமாக பாலை புகட்டி உறங்க வைக்கின்றனர்.

இதனால் மூச்சு திணறல் ஏற்பட்டு சத்தமில்லாமல் குழந்தைகள் மரணமடைகின்றன. இதனை தவிர்க்க பல்வேறு நடவடிக்கைகளை கடைபிடிக்க வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

எடைகுறைவான, ப்ரீமெச்சூர் குழந்தைளுக்கே இந்த ஆபத்து அதிகம். ஆண்குழந்தைகள் அதிக அளவில் தொட்டில்களில் மரணமடைவது கண்டறியப்பட்டுள்ளது. குப்புறப் படுக்க வைக்கும்போது குழந்தையின் உடல் எடை அதன் மென்மையான மார்பு எலும்புகளை அழுத்துவதால் குழந்தைக்கு திடீர் மூச்சுத் திணறல் ஏற்படும் அபாயம் இருக்கிறது.





தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளுக்கு இந்த ஆபத்து ஏற்படும் வாய்ப்பு 50 சதவீதம் குறைகிறது என்று கூறும் மருத்துவர்கள், கட்டாயப் படுத்தி குழந்தைக்கு பால் புகட்டக் கூடாது என்கின்றனர். .

மேலை நாடுகளோடு ஒப்பிட்டால் ஆசியாவில் இப்படிப்பட்ட குழந்தை மரணங்கள் குறைவுதான். காரணம், மேலை நாடுகளில் குழந்தைகளைப் பெற்றோர் தனியாகப் படுக்க வைப்பதுதான்.

தனியாக படுப்பதால் கதகதப்பையும் ஒரு பிடிமானத்தையும் தேடி, குழந்தை குப்புற கவிழ்ந்துகொள்ளும் வாய்ப்புகள் அதிகம். இதைப் போன்ற சமயங்களில் திடீரென்று தொட்டில் மரணம் நிகழ்கிறது.

அணைப்பும் ஆதரவும் எவ்வளவு முக்கியம் என்பதை தாய்மார் உணர்ந்து கொள்ளல் மிக அவசியமானதாகும்.

முற்றும்.. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 3, 12, 48. . . எனும் விருத்தியில் முதல் 7 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

02. ஜதி தன்னிடமிருந்த 10,000 ரூபாவை 8வீத ஆண்டு வட்டி வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றில் வைப்பு செய்தாள். அவளுக்கு இரண்டு வருட இறுதியில் கிடைக்கும் (கூட்டு வட்டி முறையில்) மொத்தப்பணம் எவ்வளவு?

03. இலங்கையிலுள்ள தாயார் ஒருவர் கப்பலொன்றில் வேலை செய்யும் தனது மகனிடமிருந்து 5000 அமெரிக்க டொலர்களையும், பிரான்சிலுள்ள மகளிடமிருந்து 2000 யூரோக்களையும் ஒரே நேரத்தில் பெறுகின்றார். எனின்,
1. அவருக்கு மகனிடமிருந்தும் மகளிடமிருந்தும் கிடைத்த தொகைகளைத் தனித் தனியே காண்க.
2. மகன் அனுப்பிய பணத்திலிருந்து எவ்வளவு தொகை யூரோக்களைப் பெற முடியும்?

04. ஒரு தந்தையின் வயது மகனின் வயதிலும் 6 மடங்கிலும் 1 கூட. 11 வருடங்களின் பின்னர் அவர்களின். வயதுகளுக்கிடையிலான விகிதம் 12:5 எனின், தந்தையின் தற்போதய வயது யாது?

05. காரணிப்படுத்துக. $4a^3 - 32a$

06. ஒரு நீர்தொட்டி முற்றாக நிரப்பப்பட்டிருந்தது. அதிலிருந்து 1/3 பங்கை முதல் பாவித்தும் இரண்டாம் நாள் 1000L நீரை பாவித்ததன் பின்னர் மிகுதியாக 5/8 பங்கு நீர் காணப்பட்டது எனின், அத்தாங்கியின் முழுக் கனவளவு யாது?

07. பின்வரும் சூத்திரங்களை எழுவாய் மாற்றம் செய்க
1. $V = U + at$ (t) 2. $1/f = 1/v + 1/u$ (v)
3. $a^2 + 2ac = b^2 + d$

09. யாதாயினும் ஒரு நேர்கோட்டின் பொது வடிவம் $2y/3 = x/6 + 1$ எனின், இதனை $ax + by + c = 0$ எனும் வடிவில் தருக.

10. ரூபா 75000 பெறுமதியுள்ள ஒரு தொலைக்காட்சிப்பெட்டி ஒன்றை ஆரம்பத்தில் 15000 செலுத்தி மிகுதியை ரூபா 4150 வீதம் 15 சமமாத கட்டணமாக செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம்.
அ. மாத அலகுகளின் எண்ணிக்கை?
ஆ. செலுத்திய மொத்த வட்டி எவ்வளவு?

11. AB = 5cm ஆகவுள்ள நேர்கோடு ஒன்றை அமைக்க.
1. A,B இற்கு சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை அமைக்க.
2. அவ்வொழுக்கு AB யை வெட்டும் புள்ளியை T எனக் குறிக்க.
3. AT, BT யின் நீளங்களை அளந்து எழுதுக.
4. AT, BT இடையேயான தொடர்பை எழுதுக.

12. சதுரமுகக் குறுக்கு வெட்டுச் சுற்றளவு 44cm ஆகவுள்ள செவ்வரியத்தின் நீளம் 35 cm எனின்,
1. குறுக்குவெட்டு முகப் பரப்பளவு 2. கனவளவு
ஆகியவற்றைக் காண்க.

**கணிதம் வழிகாட்டல் -**

**திருமலையின் பிரபல ஆசிரியர்**

**MATHS**

Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)

**T. Kumanan 0772975953**

**23. Sivan st Trinco.**

G.C.E (O/L) பிரதி சனி தோறும்

பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.

## பாடம் : விஞ்ஞானம்

1. என்பு மீன்கள் பற்றி கூறப்பட்டவற்றுள் சரியானது அல்லது சரியானவை?
அ. பொதுவாக அறிவிக்கோட்டு வடிவமானது.
ஆ. சுவாசம் பூக்கள் மூலம் நடைபெறும்.
இ. பூப்பிளவுகள் உடல்மேற்பரப்பில் தனித்தனியாக திறந்திருக்கும்.
1. அவும் ஆவும் 2. அவும் இயும்
3. ஆவும் இயும் 4. அ, ஆ, இ மூன்றும்

2. பின்வரும் அங்கிகளில் எதன் இனப்பெருக்க கட்டமைப்பு வெறுங்கண்ணுக்கு தெரியக் கூடியதாக இருக்கும்?
1. மியுக்கர் 2. றைசோபஸ் 3. காளான் 4. பென்சிலியம் நொட்டேரம்

3. தூண்டல் ஏற்படும் போது விரைவாகவும் திறமையாகவும் சுருங்கக்கூடிய ஆற்றலைக் கொண்டதும், கலமுதலுருவில் உள்ள இளம் நிற, கருமை நிற பட்டிகைகள் வெறுங் கண்ணுக்கு புலப்பட கூடிய தசையிழையம் எது?
1. வன்கூட்டுத்தசை 2. மழ மழப்பான தசை 3. இதய தசை
4. மழ மழப்பான தசையும், இதய தசையும்

4. சுவாசப்பையின் காற்றுறைகள் போமனின் உறையின் உட்புறச்சுவர் போன்றவற்றில் காணப்படும் மேலணி இழையம் எது?
1. செதின் மேலணி 2. கனமேலணி 3. கம்பி மேலணி
4. பிசிர் மேலணி

5. ஒளித்தொகுப்பின் போது உற்பத்தியாக்கப்பட்ட குளுக்கோசு தற்காலிகமாக மாப் பொருளாக மாற்றப்பட்டு பச்சையவுருமணியினுள் சேமிக்கப்படும். பின்னர் எவ்வடிவில் தாவரத்தின் ஏனைய இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது.
1. குளுக்கோசு 2. சுக்குரோசு 3. மோல்ரோசு
4. மாப்பொருள்

6. மண்ணீர் வேர்மயிரிலிருந்து தாவரகாழ் கலன் வரை கடத்தப்படும் பாதையை சரியாக குறிப்பது?
1. மேற்றோல் அகத்தோல் பரிவட்ட உறை மேற்பட்டை காழ்
2. மேற்றோல் மேற்பட்டை அகத்தோல் பரிவட்டஉறை காழ்
3. மேற்றோல் மேற்பட்டை பரிவட்ட உறை அகத்தோல் காழ்
4. மேற்றோல் பரிவட்ட உறை மேற்பட்டை அகத்தோல் காழ்

7. காச நோய் காரணி பற்றீரியாவான பசிலிஸ் ரியூபளோசிஸ் என்ற நுண்ணங்கி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
1. வில்லியம் கார்வே 2. ரொபர்ட் கொக்
3. அலெர்சாண்டர் பிளமிங் 4. கிரகர் மென்டல்

8. சுவாசப்பை சிற்றறைகளில் வாயுப்பரிமாற்றம் நிகழ போதிய சுவாசம் கிடைப்பதற்கு குருதிகலங்கள் எவ்வாறு சிறப்படைந்துள்ளது?
1. செங்குழியங்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது.
2. வெண்குழியங்களின் எண்ணிக்கை அததிகமாக காணப்பட்டது
3. செங்குழியங்களின் விட்டம் குருதி மயிர்த்துளைக்குழாயின் விட்டத்திலும் அதிகமாக காணப்பட்டது.
4. செங்குருதி கலங்கள் மயிர்துளை குழாயிகளினூடாக விரைவாக செல்லக் கூடியதாக இருந்தது.

9. (x என்பது நியம குறியீடு அல்ல) எனும் மூலகம் உருவாக்கும் ஒட்சைட்டு எவ்வியல்பை காட்டும்?
1. அமில இயல்பு 2. ஈரியல்பு 3. கார இயல்பு
4. சேர்வையை உருவாக்காது

10. A எனும் மூலகத்தின் அணு எண் 2. B எனும் மூலகத்தின் அணு எண் 10 எனின், A, B ஆகிய மூலகங்களின் கூட்டங்கள் முறையே
1. II ம், VIII ம் கூட்டம் 2. II ம், III ம் கூட்டம்
3. VIII ம், VIII ம் கூட்டம் 4. IIம், IV ம் கூட்டம்

11. காபன் அல்லது காபனோரொட்சைட்டு மூலம் தாழ்த்திப் பெறப்படும் உலோக மூலகங்கள் எவை?
1. Zn, Fe, Na 2. Pb, Cu, Au 3. Pb, Fe, Zn 4. Na, Au, Cu

## பாடம் : தமிழ்

பகுதி 01

1. நல்குரவு என்பதன் பொருள்?
1. நன்மை 2. வீரம் 3. பகைமை 4. வறுமை 5. வெற்றி

2. நாயகன் என்பதை இவ்வாறும் அழைக்கலாம்?
1. ஆசாமி 2. கள்வன் 3. தலைவன் 4. வேலைக்காரன்
5. அடிமை

3. கிழக்குக் கிளை மொழி அல்லாதது எது?
1. போவார்கள் 2. வாறாங்க 3. மறுகர் 4. கிறுகி
5. முல்லைக்காரர்

4. இணைமொழி அல்லாதது எது?
1. அல்லும் பகலும் 2. துடியிடை 3. இடைஇடை 4. ஓடிஆடி
5. கண்டது கடியது

01. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.
1. கூட்டுப் பெயர் பற்றி சுருக்கமாக விளக்குக.
2. இடைநிலை மெய்மயக்கத்தின் இரு வகைகளையும் விளக்குக.
3. ஏவல் வினை, வியங்கோள் வினைக்கான வேறுபாட்டினை தருக.
4. வேற்றுமைப் புணர்ச்சி பற்றி விளக்கி உதாரணம் தருக.
5. உடன்பாட்டு, எதிர்மறை ஏவல் வினைகளை உதாரணம் தந்து விளக்குக.
6. நான்மணிக்கடிகையில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துக்கள் யாவை?
7. புறநானூறு பாடலின் பொருளை உமது நடையில் எழுதுக.
8. புதுக்கவிதைக்கும், மரபுக் கவிதைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் யாவை?
9. ஒரு சிறந்த விளம்பரத்தின் பண்புகள் யாவை?
10. உடைமைப் பொருள்களை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? அவை எவை?

02. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் வேற்றுமை உருபையும், பொருளையும், சொல்லுருபையும் இனங்கண்டு எழுதுக.

1. உழைப்பாள் உயர்ந்தவன் 2. பாலோடு தண்ணீர் கலந்தான்
3. நண்பியுடன் சென்றாள். 4. நோயால் வாடினான்

03. பின்வரும் சொற்களுக்கான பொருளினைத் தருக.
லாவகம், கணந்தோறும், களம், சொற்செட்டு, செறிவு

04. பின்வரும் வாக்கியங்களை கூட்டு வாக்கியங்களாக்குக.
அ. 1. பாரதி ஒரு மகாகவி.
2. இது இலக்கிய வாதிகளின் கருத்தாகும்.

ஆ. 1. சஞ்சுதன் திருகோணமலையில் பிறந்தான்.
2. கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கல்வி கற்றான்.

இ. 1. மிகப் பெரிய பரப்பைக் கொண்டது ஆங்கில பாடம்.
2. ஆங்கில பாடம் பேசுவதற்கு இலகுவானது.

**அடுத்தவாரம் முதல் திருமலையின் பிரபல வரலாற்றுப் பாட ஆசிரியர் அகிலன் அவர்களின் வரலாற்றுப் பாட வினாக்கள் வெளியாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செருப்புமாலை....

இச்சம்பவம் தொடர்பில் தகவலறிந்த சேருநுவர பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.பீ.வீரரத்ன, பாதிக்கப்பட்ட மாணவிக்கு தனது சொந்த செலவில் சப்பாத்து வாங்கிக் கொடுத்துள்ளார்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது.

தந்தையை இழந்து தாயுடன் ஏழ்மை நிலையில் வாழ்ந்து வந்துள்ள மேற்படி மாணவி தன்னிடம் சப்பாத்து இல்லாத காரணத்தால் செருப்பை அணிந்து பாடசாலைக்குச் சென்றுள்ளார்.இதனை அவதானித்த பாடசாலையின் ஒழுக்க நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியை, அம் மாணவியை தண்டிக்கும் முகமாக அவர் அணிந்து வந்த செருப்பை மாலையாக்கி மாணவியின் கழுத்தில் அணிவித்துள்ளார்.

இது தொடர்பில் தகவல் அறிந்த சேருநுவர பொலிஸார் பாடசாலைக்குச் சென்று அதிபரிடம் விசாரணை மேற்கொண்டதுடன் குறித்த மாணவிக்கு சப்பாத்தும் வாங்கிக் கொடுத்துள்ளார்.எவ்வாறாயினும் மாணவியின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இப்பிரச்சினையை பெரிதுபடுத்த விரும்பவில்லை என பாதிக்கப்பட்ட மாணவியின் தாயார் தெரிவித்திருந்தார்.

எனினும் விடயம் வெளித்தெரிந்தவுடன் சேருநுவர வலயக் கல்விப் பணிப்பாளரும், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் தனித்தனியாக விசாரணைகளை முன்னெடுத்தன. அவ்விசாரணைகளின் முடிவில் குற்றவாளியாகக் காணப்பட்ட குறித்த ஆசிரியை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## இராசதந்திர நகர்வுகளை...

கடந்த வியாழக்கிழமை (1) நடாத்திய மே தினக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சர்வதேச ரீதியாக இராஜ தந்திரத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு காய்நகர்த்தி வருகின்றது. அதை மழுங்கடிக்கச் செய்வதற்கு அரசாங்கம் பல்வேறு கோணங்களில் முனைந்த போதிலும் சர்வதேசமும் தமிழ் மக்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இருப்பதால் அரசாங்கத்தினால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளை மழுங்கடிக்கச் செய்யமுடியாதுள்ளது. 2012 மற்றும் 2013, 2014ம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதில் இவ்வாண்டு இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் இலங்கை மீது சர்வதேச விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதையொட்டி அரசாங்கம் இன்று கவலையடைந்துள்ளது. குறைந்து வரும் அரசின் வாக்கு வங்கியை எவ்வாறு அதிகரிக்கலாம் என்பதற்காக அரசாங்கம் பல்வேறு தந்திரோபாயங்களை கையாண்டு வருகின்றது.

இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தின் அடிப்படையில் சர்வதேச விசாரணை நடைபெற்றே தீரும். இதில் சர்வதேசம் உறுதியாகவுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவராக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருக்கும் வரைக்கும் கனடா வழங்கும் நிதியை நிறுத்தியுள்ளது.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை மாநாட்டில் மத்திய கிழக்கிலுள்ள நாடுகளையும் ஆபிரிக்காவிலுள்ள சில நாடுகளையும் தவிர ஏனைய நாடுகளின் முழுமையான ஆதரவு தமிழ் மக்களுக்கே உண்டு என்பதை நாம் காண்கின்றோம். இங்கு அரசாங்கத்தோடு நின்று கூவித்திரிகின்ற சில அரசியல் வாதிகள் அரசுக்கு முட்டுக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

எத்தனை நாட்களில் தேர்தல் வந்தாலும் எமது தமிழ் மக்கள் எம்முடனேயே நிற்பார்கள்.

இன்று இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லை, நாட்டில் சுதந்திரம் இல்லை. தொழிற்சங்க நடவடிக்கைகள் குறைந்து செல்கின்றன. இந்த நாட்டில் பொருட்களின் விலைவாசி நாளுக்கு நாள் ஏற்றமடைந்து செல்லும் நிலையில் அதற்கு எதிராக தொழிற்சங்கங்கள் பாரியளவில் தொழிற் சங்க நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்ட போது அதற்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்களை நடாத்தினர்.

அதேபோன்று விலைவாசி அதிகரிக்கப்பட்ட போது அதற்கும் ஆதரவாக சில தொழிற் சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது இலங்கையில் மாத்திரம் தான். நாங்கள் நடத்தும் மேதினக் கூட்டத்தை வேறு ஒரு மண்டபத்திற்கு மாற்றியுள்ளதாக சிலர் துண்டுப்பிரசுரங்களை இரவோடு இரவாக விநியோகித்ததுடன் எமது கட்சியின் முக்கியஸ்த்தர்கள் சிலருக்கும் குறுந்தகவல்களையும் அனுப்பியுள்ளனர். இது இங்கு ஜனநாயகம் இல்லை என்பதைக் காட்டுகின்றது. அதேபோன்று எமது தமிழரசுக்கட்சியின் 14ஆவது மாநாடு மட்டக்களப்பில் நடைபெற்ற போது கறுத்த கொடிகளைக் கட்டி எமது மாநாட்டுக்குக் குந்தகம் விளைவித்தனர்.

துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டனர். எமது மாநாட்டுக்கு வருகை தந்தவர்களின் வாகனங்களை கல்வீசித் தாக்கினர். இவையனைத்தையும் செய்த போதிலும் கடந்த ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபை தேர்லின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அறுதிப் பொரும்பான்மையைப் பெற்றுவெற்றி பெற்றது.

அம்பாறை மாவட்டத்திலும் தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பையே ஆதரித்தனர்.இதே போன்றுதான் வட மாகாணத்திலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மிகப் பெரும் வெற்றியீட்டியது. தமிழ் தேசியக் கூட்டமைப்பானது ஜனநாயக ரீதியாக தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது" என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழரசுக்கட்சி...

ஆனால் தமது உழைப்பின் மூலம் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட பிரதேச மற்றும் மாகாண சபைகளுக்குத் தெரிவாகி பதவிகளை வகிக்கும் தமிழரசுக் கட்சியினர் மூத்த உறுப்பினர்களான தம்மை மதிப்பதில்லை என்றும் தமது அதிருப்தியை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர்.

இவ்அதிருப்தியினை வெளிப்படுத்துவதற்காக நாடாளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுடனான சந்திப்பு நடைபெறும் தினத்தில் எதிர்ப்பார்ப்பாட்டமொன்றில் ஈடுபடத் தாம் திட்டமிட்டிருந்ததாகவும் அவர்கள் தலைவருக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

அதனை அமைதியாகச் செவிமடுத்துள்ள தலைவர் தற்போதைக்கு எவ்வித தளம்பல்களையும் உருவாக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டதுடன் தகுந்த நடவடிக்கைகளை தாம் எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார் என நம்பத்தகு செய்தி மூலங்கள் தெரிவிக்கின்றன.

## காணாமல் போனவர்...

ஈடுபட்டிருப்பது தெரியவந்துள்ளதாக தற்போது அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியச் சிறையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் ஒன்பது தமிழ் இளைஞர்களின் படங்கள் வெளியானதைத் தொடர்ந்து அப்படத்திலுள்ள இளைஞர் ஒருவர் திருகோணமலையைச் சேர்ந்தவர் என அவரது உறவினர்கள் அடையாளம் கண்டு கொண்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து படகிற் பயணித்துக் காணாமற் போயுள்ள பல இளைஞர்களின் நிலையைத் தெரிந்துகொள்ள வாய்ப்பொன்று கிட்டியுள்ளதாக தெரிகின்றது.

இத் தகவல் தெரியவந்ததை அடுத்து குறித்த முகாமின் தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக்கொண்ட உறவினர்கள் அம்முகாமைத் தொடர்பு கொண்ட போது அங்கிருப்பவர்களின் விபரங்களை தம்மால் தரமுடியாது எனத் தெரிவித்திருப்பதுடன் இந்தோனேசியாவிலுள்ள புலம்பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பினைத் (IOM) தொடர்பு கொள்ளும்படித் தெரிவித்து தொடர்பு கொள்ள இலக்கமொன்றையும் வழங்கியுள்ளனர்.

அவ்விலக்கத்துடன் தொடர்புகொண்ட உறவினர்களுக்கு முகாமிலுள்ளவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை எனத் தெரிகின்றது.

## நான் உட்பட தலைவர்...

இந்தச் சந்திப்பு குறித்து நேற்று திருகோணமலையில் நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே வடக்கு முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையுடன் இணைந்து செயற்படுவதற்கான ஏதுக்கள், கருத்துக்கள் கிழக்கு முதலமைச்சரிடம் இல்லை. அவர் வடக்குத் தலைவர்களைப் புலிகள் என்றே கருதுகிறார்.

இவ்வாறானவர்களுடன் இணைந்து செயற்படுவதால் தமக்கு நெருக்கடி ஏற்படும் என்ற அச்சத்துடனேயே அவர் பதிலளித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். எனவே இரு மாகாணங்களும் இணைந்து செயற்படுவதே சிறந்தது என நான் அவரிடம் சுட்டிக்காட்டினேன்.

ஆனால் இந்த கருத்தை அவர் ஏற்றுக்கொண்டவராகத் தெரியவில்லை. சங்கடத்துடனேயே பதிலளித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் பொதுவான பிரச்சினைகள் தொடர்பில் தெரிவித்த போதும், அவர் மத்திய அரசிடம் பேசவேண்டும் என்று சர்வசாதாரணமாகப் பதிலளித்தார் எனவும் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் முதலிடுங்கள்...

நல்ல சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. எனவே மலேசிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலிட ஆர்வம் காட்ட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே மலேசிய முதலீட்டாளர்கள் குழுவொன்று கிழக்கில் முதலிட விரும்பம் கொண்டு அதற்கான சாத்தியப்பாடுகளை ஆராயும் விஜயமொன்றை கிழக்கில் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 400 டப்லட் கணனி....

கிடப்பதாக ஊழியர் திணைக்கள ஊழியர்களின் தொழிற் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக இக் கணனிகள் களஞ்சியத்தில் கிடப்பதாகத் தெரிவித்துள்ள அச் சங்கம் 400 மில்லியன் ரூபா ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளது. அத்துடன் இப் பெரும் பணச் செலவுடனான கொள்வனவிற்கு முன்னராகத் தொழிற் திணைக்கள அலுவலர்களிடம் எவ்விதமான கலந்துரையாடலிலும் ஈடுபடவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

## மதமாற்றப்படும் சைவ...

இலங்கையில் தற்போது பௌத்த சிங்கள மற்றும் இந்து மதத்தவர்களுக்கே அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு வருகின்றது. மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள முஸ்லிம் மதத்தீவிரவாதிகள் தற்போது இலங்கையிலும் பாரிய அளவில் செயற்பட்டு வருகின்றனர். அது மாத்திரமின்றி கிறிஸ்தவ இனவாத அமைப்புகளும் நாட்டில் பாரிய அளவில் மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை தற்போதைய நிலைமையில் கொழும்பில் மாத்திரம் 1 இலட்சத்திற்கும் அதிகமான இந்துக்களும், பௌத்தர்களும் கட்டாயத்தின் பெயரில் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர். முஸ்லிம்கள் அதிகளவில் வாழும் பகுதிகளில் உள்ள தமிழ், சிங்கள மக்களை மத மாற்றும் செயற்பாடுகளை முஸ்லிம் மதத் தீவிரவாத அமைப்புகள் செய்து வருகின்றன. அதேபோல் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்லும் பௌத்த, தமிழ் இன மக்களில் 80 ஆயிரத்திற்கும் அதிகமானோர் முஸ்லிம் தீவிரவாதிகளால் மத மாற்றப்பட்டுள்ளனர். இவை தொடர்பில் போராட எந்தவொரு அமைச்சர்களும் முன் வருவதில்லை.

நாம் மட்டுமே இன்று மக்களுக்காக போராடிக் கொண்டிருக்கின்றோம். நாம் கிறிஸ்தவ, முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. நாம் மற்ற மதங்களையும், கலாசாரங்களையும் மதிக்கின்றோம். ஆனால் சில மதத் தீவிரவாத அமைப்புகளும், அவற்றை ஊக்குவித்து பிரிவினையினை வளர்க்கும் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் கிறிஸ்தவ ஆயர்களுக்கும் எதிராகவே எமது எதிர்ப்பு எழுந்துள்ளது.

## கங்குவேலி...

எனவே கௌரவ மதிப்பிற்குரிய சனாதிபதி அவர்களே தாழ்மையாகத் தங்களிடம் கேட்டுக்கொள்வதுஇவ்வாலயத்திற்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளைக் களைந்து அனைவரும் சமாதானமாக வாழ ஆவன செய்யுமாறு இறையன்போடு வேண்டுகின்றோம் என மூதூர் பிரதேச இந்துக் குருமார் சங்கத்தினர் சனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கடிதத்தின் பிரதிகள் பிரதமர், கிழக்கு மாகாண ஆளுனர், மாவட்ட மற்றும் பிரதேசச் செயலாளர் உட்பட இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வாரம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட மாகாண எதிர்கட்சித்தலைவர் திரு. தண்டாயுதபாணி அவர்கள் இவ்விடயத்தை மாவட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

## பாடசாலைக்காணி....

நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளருக்குப் பாரப்படுத்தியிருந்தார்.

எனினும் அக்காணியை மீளப் பாடசாலைக்கு வழங்க முடியாதிருப்பதாக பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளர் திருமதி.ச.ஜலதீபன் அறிவித்துள்ளார்.

2009ம் ஆண்டில் இருந்து பற்றை மண்டிக்கிடக்கும் இப்பிரதேசம் இன்று வரை எவ்வித அபிவிருத்திக்கும் உள்ளாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நகரின் பிரதான பகுதியில் பற்றை மண்டிக்கிடக்கும் இக்காணி நகரசபைக்கு முன்புறமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வறிவிப்பின் பின்னர் தொல்பொருட் திணைக்களத்துடன் பேசி யாதாயினும் ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ள எவரும் முன்வரவில்லையே என்ற ஆதங்கத்தைப் பாடசாலைச் சமூகம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**உண்மையை உலகுக்குச் சொல்லக் கூடிய பத்திரிகையாளர்கள் தேவை - 075 4252042**




# சிந்தித்துப் பார்!!

- நீ எங்கிருந்தாலும் அல்லாஹ் உன்னை பார்த்துக் கொண்டிருக்கின்றான். நீ பேசுபவைகளை செவிமடுக்கின்றான் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்!
- நீ பேசக்கூடியவைகள், செய்யக் கூடியவைகள் யாவற்றையும் அல்லாஹ்வின் வானவர்கள் பதிவு செய்கிறார்கள் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்!
- நீ தவறு செய்வதற்கு முன் மரணத்தையும், ஸ்கராத்துடைய வேதனையையும் கப்ரையும், மறுமை நாளையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்!




- மறுமை நாளில் உனது உடல் உறுப்புக்கள் அனைத்தும் உனக்கு எதிராக சாட்சி சொல்லும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப்பார்!
- தவறு செய்தால் அதற்காக கப்ரிலும், மறுமையிலும் கைசேதப்பட வேண்டுமே என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்!
- நீ தவறு செய்வதற்கு முன் நான் இந்தத் தவறைச் செய்துவிட்டால் மறுமை நாளில் மஹசர் மைதானத்தில் எனக்கு அருகாமையில் சூரியன் கொண்டுவரப்படும். அப்போது நான் வியர்வையால் மூழ்கடிக்கப்படுவேனே என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்!
- நீ தவறு செய்து விட்டால் மறுமை நாளில் உனது முகம் கறுத்த நிலையில் நீ எழுப்பப் படுவாய் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்!

– எம்.ஆர். [illegible] –

# செஞ்சிலுவை இயக்கத்தின் வரலாறு

பாகம் - 02




சென்ற பாகத்தில் செஞ்சிலுவை இயக்கத்தின் தோற்றத்தினையும், அதனைத் தோற்றுவித்த ஜீன் ஹென்றி டுனான்ட் அவர்களைப் பற்றியும் அறிந்தோம்.

இனி ஹென்றி டுனான்ட் அவர்களுடன் செஞ்சிலுவை இயக்கம் தோன்றிய பின் அதனது படிப்படியான செயற்பாடுகளையும் பற்றிப் பார்ப்போம்.

1859ம் ஆண்டு – சொல்பரினோ யுத்தம்
1862ம் ஆண்டு – சொல்பரினோ நினைவுகள் நூல் வெளியீடு
1863ம் ஆண்டு பெப்ரவரி 09ம் திகதி – ஹென்றி டுனான்ட் ஐவர் குழுவினை அமைத்தார்.

1863ம் ஆண்டு ஒக்டோபர் 29ம் திகதி – சர்வதேச காயமுற்ற போராளிகளுக்கு உதவும் குழு உதயம்.

1864ம் ஆண்டு ஆகஸ்ட் 22ம் திகதி – முதலாவது ஜெனீவா உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டமையும் செஞ்சிலுவை இலச்சினையை அங்கீகரித்தலும்.

1867 வரை இச் செஞ்சிலுவைக் குழுவின் செயலர் கனவான் ஜீன் ஹென்றி டுனான்ட் அவர்கள் ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் அரசர்கள், பட்டத்து இளவரசர்கள், அரச அதிபர்கள் போன்றோரைச் சந்தித்ததனால் அவரது புகழ் உலகெங்கும் பரவலாயிற்று.

இவ்வேளையில் அவரது நிதி நிலைமை மோசமடையத் தொடங்கியது. அவரது வங்கிக் கணக்கு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது. சகல சொத்துக்களையும் இழந்த அவர் ஏறக்குறைய ஒரு மில்லியன் (பத்து லட்சம்) சுவிஸ் பிராங்க் தொகை அளவுக்குக் கடனாளியானார்.

தொடரும் ....

டாக்டர் என்.ரவிச்சந்திரன்
கிளை நிறைவேற்று அதிகாரி
திருகோணமலை கிளை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்




# முகப் பொலிவுக்கு - டிப்ஸ்

பப்பாளிப்பழம் உடல் நலனுக்கு மாத்திரமல்ல சரும பராமரிப்புக்கும் மிகவும் சிறந்ததாகும். வறண்ட தோலை அகற்றி புதிய தோலை உருவாக்குகிற வல்லமை பப்பாசிக்கு உண்டு.

- முகம் கரடுமுரடாக இருப்பவர்கள் பப்பாசித் தோலை ஒரு பாத்திரத்தில் இட்டு வேக வைத்து நன்றாக வெந்ததும் அதை அரைத்தெடுத்துக் கொள்ளவும். பின் அதனை 15 நிமிடங்கள் வரை முகத்தில் பூசி கழுவி வர முகத்தோல் மென்மையாக மாறும்.
- இக்கூழினை முகத்தில் மெதுவாகப் பூசி மசாஜ் செய்து பின்னர் மிதமான சுடுநீரில் கழுவினால் முகம் பளிச்சென்று தோற்றமளிக்கும்.
- கண்ணில் கருவளையம் இருப்பவர்கள் சோற்றுக்கற்றாழை இலையின் ஜெல்லுடன் பப்பாசிப் பழக் கூழினை கலந்து கழுத்தில் இருந்து மேல் நோக்கி முகம் முழுவதும், கண்ணின் கீழ்ப்பகுதி, மேல்ப் பகுதி உட்பட பூசி நன்றாகக் காய்ந்ததும் தண்ணீரில் கழுவி விடவும். இவ்வாறு வாரத்தில் இரண்டு நாட்கள் செய்து வர கண்ணின் கருவளையம் மட்டுமன்றி முகத்தில் காணப்படும் கருந்திட்டுக்களும் இல்லாது போய்விடும்.



- இரவு படுக்கப் போகும் முன்பு புதினா சாறை முகத்தில் பூசி, மறுநாள் காலையில் முகம் கழுவி வரவும். சிறிதளவு பால், ஒரு ஸ்பூன் காலி ஃபிளவர் சாறு, ஒரு ஸ்பூன் முள்ளங்கிச் சாறு சேர்த்து முகம் பூராவும் பூசி 10 நிமிடம் கழித்து நன்றாக கழுவி வந்தால் முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள் மறைந்து முகம் பளபளப்பாக மாறும்.
- முகத்திற்கு உருளைக்கிழங்கு சாற்றையும் தடவலாம். இதனால் முகம் பளிச்சென்று இருக்கும்.

# கத்தரிக்காய் மாசிக் கறி

**தேவையான பொருட்கள்**

கத்தரிக்காய் - 1/4 கி.கிராம், சிறிதாக வெட்டிய வெங்காயம் - 3மே.க, சிறிதாக வெட்டிய பச்சை மிளகாய் - 1மே.க, சிறிதாக வெட்டிய உள்ளி - 1தே.க, சிறிதாக வெட்டிய கறிவேப்பிலை - 1மே.க, கடலை 50கிராம், மாசிக் கருவாட்டுத் தூள் - 3மே.க, வெந்தயம் - 1தே.க, கடுகு - 1தே.க, பெருஞ்சீரகம் - 1தே.க, பெருங்காயம் - 1குண்டுமணியளவு, பழப்புளி - அளவாக, தடிப்பான தேய்காய்ப்பால் - 1 தம்ளர், மஞ்சள்த்தூள் - 1 தே.க, உப்பு - அளவிற்கு, தேங்காயெண்ணெய் - அரை போத்தல், கறி மிளகாய்த்தூள் - 1மே.க

**செய்முறை**



கத்தரிக்காயை ஓரளவு தடிப்புள்ள சிறு துண்டுகளாக வெட்டிக் கழுவி மஞ்சள்த் தூள் சேர்த்துக் குழைத்து கொதிக்கும் எண்ணெயிலிட்டு பொன்னிறமாகப் பொரித்தெடுத்துக் கொள்க.

கடலையை ஊறவைத்து அவித்தெடுத்து வேறாக வைக்கவும். பழப்புளியை 5 மே.க தண்ணீரில் கரைத்து வைத்துக் கொள்ளவும். தாச்சியில் இரண்டு மேசைக்கரண்டி எண்ணெயைக் காயவைத்துக் காய்ந்த பின் கடுகைப் போட்டு வெடிக்க வைத்து வெட்டிய வெங்காயம், பச்சை மிளகாய், உள்ளி, கறிவேப்பிலை என்பவற்றையிட்டு வதங்க விட்டு அரைப்பதமாக வதங்கியவுடன் வெந்தயம், வெந்தயம், பெருஞ்சீரகம் என்பவற்றையும் இட்டு வதங்கவிடவும்.

பின்பு அதனுள் அளவான உப்பு, மிளகாய்த்தூள், பழப்புளிக் கரைசல், பால் என்பவற்றை விட்டு பெருங்காயத்தை அப்பாத்திரத்தின் மூடியில் சிறிதளவு தண்ணீர் சேர்த்து அரைத்து அம்மூடியால் மூடி அவியவிடவும். தூள் அவிந்து வாசனை வரும் போது, பொரித்த கத்தரிக்காய் மற்றும் கடலை, மாசிக் கருவாட்டுத் தூள் என்பனவற்றையிட்டு கறி நீர் வற்றிச் சுண்டித் திரளும் போது இறக்கிக் கொள்ளவும்.

# தனக்கென ஓர் இடம்

பேட்மிண்டன் போட்டியில் மிக இளம் வயதில் அதிக தங்கம் வென்று, தங்க மங்கையானவர் சாய்னா நெவால். சிறு வயதிலேயே இவர் கேல் ரத்னா விருதும், காமன்வெல்த் போட்டியில் தங்கப்பதக்கமும் வென்றவர்.

8 வயதிலேயே சாய்னா பேட்மிண்டன் விளையாட தொடங்கிவிட்டார். அப்போது அவரை அவரது தந்தை நானி பிரசாத் என்ற பயிற்சியாளரிடம் அழைத்து சென்றார். சாய்னாவின் ஆர்வத்தையும் திறமையையும் கண்ட பயிற்சியாளர் உடனே பயிற்சி கொடுக்க சம்மதித்துவிட்டார்.

2002-ம் ஆண்டு முதல் தன் திறமையால் வேகமாக வெற்றிகளை குவித்துக் கொண்டே வந்ததால் அவருக்கு பண உதவி செய்ய பல நிறுவனங்கள் போட்டிபோட்டன.

2009 ஜூன் 21-ந்தேதி சாய்னா முன்னணி தரவரிசை வீராான சீனாவைச் சேர்ந்த வாங் லின் என்பவரை



மலைக்க வைக்கும் புள்ளிக் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார். இதனால் இந்தோனேசியா ஓபன் சீரிஸ் பட்டத்தை வென்றார். அவர் இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடந்த உலக சாம்பியன் பட்டத்தையும் வென்றார்.

2010 ஜூன் மாதம் நடந்த சிங்கப்பூர் ஓபன் தொடரில் மீண்டும் சூப்பர் சீரிஸ் பட்டம் வென்றார்.

அப்போது "கடுமையான உழைப்பே வெற்றிக்கு சிறந்த வழி' என்பதை நான் சிறு வயதிலே உணர்ந்துவிட்டேன்.




# குருப் பெயர்ச்சி (13.06.2014 - 05.07.2015)

***குரு பகவான் வரும் ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் நாள் 13.06.2014 மாலை 06.03 மணிக்கு மிதுன ராசியில் இருந்து கடக ராசிக்கு மாறுதலாக உள்ளார். 05.07.2015 வரை கடக ராசியில் சஞ்சாரம் செய்யவுள்ளார். குரு பகவான் கடக ராசியில் சஞ்சரிக்கவுள்ளதால் 12 ராசிகளுக்கும் உண்டாக்கக் கூடிய பலா பலன்கள். இவை பொதுவான பலன்களே!***

## மேஷம்

சுறுசுறுப்பாக பேசும் ஆற்றலும், எதையும் வெளிப்படையாக பேசும் குணமும் கொண்ட மேஷ ராசியினருக்கு ஜென்ம ராசிக்கு 4இல் சஞ்சாரம் செய்யவிருப்பது தேவையற்ற அலைச்சல்களை ஏற்படுத்தும். உடல் ஆரோக்கியத்திலும் அதிக அக்கறை எடுக்க வேண்டியிருக்கும். பண வரவுகளில் நெருக்கடிகள் தோன்றினாலும் 21.06.2014 இற்குப் பின்னர் எதிர்பாராத உதவிகள் வந்து சேரும். ஆடம்பர செலவுகளை தவிர்த்துக் கொள்வது நல்லது. பூர்வீக சொத்துக்களால் வீண் செலவுகளும், நெருக்கடிகளும் உண்டாகும். விவசாயிகளுக்கு அரசு வழியில் மானியம் கிடைக்கக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும் வாய்ப்புள்ளது. 03.12.2014 இற்குப் பின்னர் சாதகமான அமைப்பு உருவாகும். பண வரவில் இருந்த தடைகள் நீங்கும். பொன் பொருள் சேரும். தடைப்பட்ட பதவி உயர்வு, ஊதிய உயர்வுகளும் கிடைக்கக்கூடிய காலமாகும். மீண்டும் 22.12.2014 தொடக்கம் 05.07.2015 வரை பெரிதாக சாதகமான காலம் என்று கூற முடியாது. பெரிய அளவிலான தொகைகளை கடனாக வழங்குவதை அல்லது பொறுப்பு நிற்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது.

## ரிஷபம்

எப்பொழுதும் அடுத்தவர்களுக்காக செயல்படும் ரிஷப ராசியினருக்கு 6ம் வீட்டில் சனி பகவான் முற்பாதி வரை சஞ்சரிப்பதால் எதையும் சமாளித்துவிட முடியும். பணவரவுகள் தேவைக் கேற்றபடி இருக்கும். பிற்பாதியில் சனி பகவான் 7ற்குச் செல்வதால் உடல் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. திருமண வயதை அடைந்தவர்களுக்கு வரன்கள் அமைவதில் தாமதம் உண்டாகும். கல்வியில் மந்த நிலை ஏற்படக்கூடிய காலமிது. 02.12.2014 வரை பெரிதாக பலன்கள் இல்லாவிடினும் முன்னேறிச் செல்லலாம். எனினும் அதன் பிறகு சற்று நிதானத்துடன் இருப்பது நன்மை பயக்கும்.அதன் பின்னர் அலைச்சல்களும், உடல் உபாதைகளும் ஏற்படலாம். 22.12.2014 இற்குப் பின்னர் அனுபவித்த பிரச்சினைகள் எல்லாம் தீரும். தடைப்பட்ட திருமண சுபகாரியங்கள் இனிதே நடைபெறும். 16.04.2014 இற்குப் பின்னர் ஓரளவு நற்பலனை அனுபவிக்க ஏதவாக் இருக்கும். குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதங்கள் ஏற்பட்டாலும் ஒற்றுமை குறையாது. முன் கோபம் கோபம் கொண்ட நீங்கள் சற்று பொறுமையாக இருத்தல் நல்லது. குரு ப்ரீதி தட்சிணா மூர்த்திக்கு நெய் விளக்கேற்றுதல் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்கர நாற்காலி அன்பளிப்பு



கிழக்கு மாகாண சமுகசேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுகசேவைகள் பிரிவினால் வலுவிழந்த பயனாளிக்கான சக்கர நாற்காலி வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலாளர் வேதநாயகம் ஜெகதீசன் குறித்த பயனாளியின் சார்பில் அவரது துணைவியாரிடம் வழங்கி வைப்பதனையும் அருகில் சமூக சேவை உத்தியோகத்தர் ஜனாப் அமீன் உட்பட சமூக சேவை பிரிவின் உத்தியோகத்தர்கள் அருகில்நிற்பதனையும் படங்களில் காணலாம்.
(உதயகாந்த்)

## உலமாக்களின் கூட்டம்

திருகோணமலை மாவட்டத்திற்கு உட்பட்ட ஜம் இய்யத்துல் உலமா கிளைகளுக்கும், மாவட்டத்திற்கும் புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கிண்ணியா மத்திய கல்லூரி, மர்ஹூம் அப்துல் மஜீத் மண்டபத்தில் இடம் பெற்றது.

திருகோணமலை கிண்ணியா, மூதூர்,மற்றும் முள்ளிப் பொத்தானை, கந்தளாய், புல்மோட்டை, குச்சவெளி ஆகிய பிராந்தியங்களுக்கான "பிராந்திய ஜம் இய்யத்துல் உலமா மற்றும் மாவட்ட ஜம் இய்யத்துல் உலமா" ஆகிய சபைக்களுக்கான தெரிவுகள் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா மத்திய குழு உறுப்பினர்கள் பலர் கொள்ளவுள்ளனர்.

## முன்பள்ளி ஆசிரியருக்கான கதைப் போட்டி

தமிழில் சிறுவர் இலக்கியத்தை ஊக்குவிக்கும் முகமாக முன்பள்ளி ஆசிரியர்களிடையே நாடளாவிய ரீதியில் சிறுவர் கதைப் போட்டியொன்றை நடாத்த எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் முன்வந்துள்ளது.

நாட்டின் எப்பாகத்திலும் உள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ள முடியும்.

எத்தனை சிறுவர் கதைகளையும் ஒருவர் அனுப்பி வைக்கலாம் என்பதுடன் எக் கருப்பொருளிலும் கதைகள் அமையலாம்.

ஆசிரியர்களின் சுயமுயற்சியில் எழுதப்பட்ட கதைகளாக இருக்க வேண்டும். கதைகளுடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், கற்பிக்கும் பாடசாலையின் பெயர் முகவரி, என்பவற்றுடன் கையொப்பத்தை இட்டு 15.06.2014ற்கு முன் கிடைக்கக் கூடியதாக கதைகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி டாக்டர், ஓ.கே. குணநாதன், மேலாளர், அறிஞர்சோலை, 1ஏ, பயனியர் வீதி, மட்டக்களப்பு, இலங்கை.

## மட்டக்களப்பில் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கும் பட்டதாரிகள் தமது நிலை தொடர்பாகக் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த 29ம் திகதி முன்னெடுக்கப்பட்ட இப் போராட்டத்தில் தம்மையொத்த 2011ம் ஆண்டில் பட்டக்கல்வியைப் பூர்த்தி செய்த சிலருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமக்கின்னும் நியமனங்கள் வழங்கப்படவில்லை என்று அவர்கள் பொதுநிர்வாக அமைச்சிற்கு மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து அவர்களை கடந்த 29ம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு மாவட்டச் செயலகம் அழைப்பு விடுத்திருந்தது.

அதனை நம்பி நேர்முகப் பரீட்சைக்கு வருகை தந்தவர்களுக்கு அறிவிப்புப் பலகையில் நேர் முகப் பரீட்சை திகதி குறிக்கப்படாமல் பிற்போடப்பட்டுள்ளதான அறிவிப்பு கிடைத்திருந்தது.


இதனையடுத்து வருகைதந்த நூற்று எண்பத்தாறு பட்டதாரிகளும் மாவட்டச் செயலகம் முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்.

## மூத்த ஊடகவியலாளர் ஐயா. குருநாதன் அவர்களின் "ஒரு நிருபரின் களப்பதிவுகள்" புத்தக வெளியீடு







# சர்வதேசச் செய்திகள்

## "மலேசிய விமானத் தேடல்" 6-8 மாதங்கள் தேவை


மலேசிய விமானத்தைத் தேடும் பணி புதிய பரப்பில் நுழைந்துள்ளதாக அவுஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஆளில்லா ஆழ்கடன் விமானங்களைப் பயன்படுத்தி தேடும் பணி தொடங்கியிருப்பினும் தற்போதுவரை எவ்வித முன்னேற்றமும் எழவில்லை என்றார் அவர்.

காணாமற் போன விமானத்தைத் தேடும் பணிகளில் பல நாடுகளின் உதவியுடன் அவுஸ்திரேலியா முன்நின்று செயற்படுகின்றது. அதற்குக் காரணம் அந்நாட்டின் கடற்பரப்பிலேயே காணாமற் போன விமானத்தில் இருந்து இறுதியாக சமிக்கை கிடைத்துள்ளது.

இப்புதிய தேடுதலானது சுமார் 8 மாத காலத்திற்குள் 60 மில்லியன் அமெரிக்க டொலர் செலவுடன் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்துள்ளதுடன் தற்போதுவரை இராணுவ நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்டுள்ள இத் தேடுதலுக்கு இனிவரும் காலங்களில் தனியார் துறையின் உதவியைப் பெற்றுக்கொள்ளவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## மரணதண்டனை நிறுத்தப்பட்டாலும் மரணத்தைத் தழுவிய அமெரிக்கர்



விசஊசி மூலம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட போது ஏற்பட்ட தடங்கலால் மரண தண்டனை பிற்போடப் பட்டாலும் அந்நேரத்தில் உடனடியாக ஏற்பட்ட மாரடைப்பால் அம் மரண தண்டனைக் கைதி சாவடைந்துள்ள சம்பவம் அமெரிக்காவில் நிகழ்ந்துள்ளது.

கிளேடொன் லொக்கேட் (38 வயது) என்ற மேற்படி கைதிக்கு நாளமொன்றில் ஏற்பட்ட செயலிழப்பானது அவருக்கு உடலில் நச்சு ஊசி மருந்து முழுமையாக செயற்படுவதை தடுத்ததால் 20 நிமிடங்களின் பின் அவரது மரணதண்டனை அரைகுறை நிலையில் நிறுத்தப்பட்டது. அந்த 20 நிமிட நேரத்தில் கிளேடன் கடும் வேதனையில் துடித்துள்ளார்.


மரணதண்டனை நிறுத்தப்பட்டபோதும் கிளேடன் மாரடைப்புக்குள்ளாகி மரணமடைந்தார்.

## அமெரிக்காவிற்கு அருகில் இரஸ்ய புலனாய்வுக் கப்பல்

அமெரிக்கக் கடல் எல்லைக்கு அப்பால் கியூப நாட்டிற்கு அருகில் இரஸ்யாவிற்குச் சொந்தமான இரண்டு புலனாய்வுக்கப்பல்கள் கடந்த மாதம் முழுவதும் தரித்திருந்ததாக பென்டகன் செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்விடயம் முன்னரே தமக்குத் தெரிய வந்திருந்தது எனத் தெரிவித்திருக்கும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைப்பான பென்டகன் அமெரிக்க கடல் எல்லைக்கு அப்பால் அவை தரித்திருந்ததால் தம்மால் எதுவும் செய்ய முடியாதிருந்ததாகவும் தெரிவித்துள்ளது.

## உலகின் சிறந்த பொருளாதாரமாக சீனப் பொருளாதாரம்



உலகின் முதற்தரச் சிறந்த பொருளாதாரமாக சீனா இவ்வருடத்தில் மாறிவிடும் என்பதை உலகவங்கியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1872ம் ஆண்டில் இருந்து முதற்தரப் பொருளாதாரமாக விளங்கிவரும் அமெரிக்கப் பொருளாதாரத்தைப் பின்தள்ளியே சீனா இவ்வருடத்தில் இந்நிலையிணை எட்டிவிடும் என அத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.


அமெரிக்க நூற்றாண்டின் மறைவையும் சீன நூற்றாண்டின் உருவாக்கத்தையும் பிரதிபலிப்பதாக இச் செயற்பாட்டை உலகவங்கி வருணித்துள்ளது.



சீனா 2019ம் ஆண்டிலேயே இந் நிலையை அடையும் என எதிர்பார்க்கப்பட்டது எனினும் அதன் அதீத வளர்ச்சி 2014 அந்நாட்டை முதல் நிலைக்குத் தள்ளிவிடும் என உலகவங்கி தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமாற்றப்படும் சைவமக்களுக்கு ஆதரவாகப் போராடுவோம்




அப்பாவி இந்துக்களை மதமாற்றும் நடவடிக்கையில் முஸ்லிம், கிறிஸ்தவ மதத் தீவிரவாதிகள் ஈடுபடுகின்றனர். அப்பாவி பௌத்த மற்றும் இந்துக்களை பாதிக்கும் எந்தவொரு செயற்பாட்டினையும் நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என பொதுபல சேனா பௌத்த அமைப்பு தெரிவித்தது.

பௌத்த நாட்டில் முஸ்லிம்களுக்கு அடிபணிய நாம் தயாராக இல்லை. ஒரு சொட்டு இரத்தம் உடலில் இருக்கும் வரையில் எமது போராட்டம் தொடரும் எனவும் அவ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுபல சேனா பௌத்த அமைப்பினால் நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவ் அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்..........,

13

## "நான் உட்பட தலைவர்களைப் புலிகள் என்றே கிழக்கின் முதல்வர் கருதுகின்றார்"




வடக்கு மாகாணசபையைச் சேர்ந்தவர்கள் கிழக்குடன் சேர்ந்து இயங்குவது பொருத்தமானதல்ல என்ற நிலைப்பாட்டிலேயே கிழக்கு முதலமைச்சர் உள்ளார் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு கிழக்கு மாகாண சபைகளின் முதலமைச்சர்களுக்கிடையிலான சந்திப்பு நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் நடைபெற்றது.

13

## கிழக்கில் முதலிடுங்கள் - மலேசியர்களிடம் அமைச்சர் ஹக்கீம்

மலேசியாவிற்கு உத்தியோகபூர்வப் பயண மொன்றை மேற் கொண்டுள்ள நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்குள்ள முதலீட்டாளர்களை இலங்கையின் கிழக்கில் முதலிட வருமாறு அழைத்துள்ளார்.

30 ஆண்டுகால யுத்தத்தின் பின்னர் முதலீட்டாளர்களுக்கான கதவுகளை இலங்கை திறந்துள்ளது . அச்சந்தர்ப்பத்தின் விசேடமாகக் கிழக்கிலும் வடக்கியும் முதலீடுகளை மேற்கொள்ள....

13

## எமது இராசதந்திர நகர்வுகளை அரசால் நசுக்க முடியாது

### கிழக்கின் மேதினக் கூட்டத்தில் த.தே.கூ




தமிழ் தேசியக் கூட்டமைப்பு இராஜதந்திர ரீதியாக காய்நகர்த்தி வருகின்றது. இதை ஒரு போதும் அரசாங்கத்தினால் மழுங்கடிக்கச் செய்யமுடியாது" என இலங்கை தமிழரசுக்கட்சியின் உப தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பொன் செல்வராசா தெரிவித்தார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பில்

13

## காணி தொல்பொருட் திணைக்களத்திற்கு உரியது




நெல்சன் படமாளிகைக்கு முன்னுள்ள வெறுங்காணியை புனித மரியாள் கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளுக்கு முன்னர் ஒதுக்கியிருந்த போதும் அக்காணியை 1940ம் இலக்க 09ப் பிரிவின் தொல்பொருள் ஆராய்ச்சிச் சட்டத்தின் கீழ் அமைச்சருக்குள்ள அதிகாரங்களின் படி 13.03.2009ல் வெளியிடப்பட்ட 1593ம் அரச வர்த்தமானியூடாகத் தொல்பொருள் ஆராய்ச்சி நிலைய நூதன சாலைக்கு கையளிக்கப்பட்டுள்ளது என்பதால் அக்காணியைப் பாடசாலைக்கு வழங்க முடியாது என திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இக்காணியைப் பாடசாலை நடவடிக்கைக்கு முன்னர் உதுக்கியிருந்ததை அடிப்படையாகக் கொண்டு அதனை மீண்டும் பாடசாலைக்கே வழங்குமாறுக் கேட்டு திருகோணமலை நகரசபை உறுப்பினர் திரு.நந்தகுமார் மாவட்டச் செயலாளருக்கு வேண்டுகொளொன்றை விடுத்திருந்தார். அதற்குப் பதிலளித்திருந்த திருகோணமலை மாவட்டச் செயலாளர் இவ்விடயம் தொடர்பாக


விளம்பரம் செய்யுங்கள்
வியாபாரத்தைப் பெருக்குங்கள்
அழைபேசி - 075-2954733



# Accountants & Audit Assistants Examination preparation Classes

**Subjects:**

- FINANCIAL ACCOUNTING
- MANAGEMENT ACCOUNTING
- AUDITING
- GOVT. FINANCIAL REGULATION
- ENVIRONMENTAL STUDIES




may 03'2014 @ 10.00 a.m.

VEAL BUSINESS COLLEGE

159 A, SEA VIEW ROAD, TRINCOMALEE.

0262227622 0770203201


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org